செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௫௧	திருவள்ளுவர் ஆண்டு ௨௦௦௮, ஆடி ஆகஸ்ட்டு 1977	பரல் ௧௨

தமிழ்நாடும் திருமடங்களும்

தமிழ்நாட்டில் சைவம் வைணவம் முதலிய சமயங்களை வளர்க்கவும், துறவுநெறியில் நிலைத்திருப்போர் தம் தவவாழ்வினைப் பாதுகாப்போடு நடத்துவதற்கும் உரிய தூய இடமாக இருப்பவையே திருமடங்கள் ஆகும்.

நம் நாட்டில் இப்பொழுது இளைஞர்களுக்குச் சமயத்துறையில் பயிற்சியும் பழக்கமும் விருப்பமும் இல்லாமையால் பலர் தவறான ஒழுக்கங்களை மேற்கொண்டு வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ளுகின்றார்கள். இப்பொழுது இறைபணி மன்றங்கள் முதலியன சில தோன்றி ஆங்காங்கே மக்களுக்குச் சமயத்துறையில் ஓரளவு நல்லறிவு நல்கிவருகின்றன. ஆயினும் அவை எவ்வளவு மக்களை நல்வழிப்படுத்துகின்றன என்று நினைந்து காணின் நூற்றில் ஒன்று இரண்டு பங்கு அளவே என்று கூறுதல் சாலும். ஏனைத் தொண்ணூற்றெட்டு மக்களுள் இன்னும் சிலரையேனும் கல்வி, ஒழுக்கம், பழக்க வழக்கம், மனமொழி மெய்களை நல்வழிப் படுத்தும் முறை, தவநெறிச் செல்லல், உண்டி சுருக்குதல் முதலிய நோன்புகளால் வலிமை பெறுதல் முதலிய துறைகளில் வளர்த்தல் வேண்டாவா? இவற்றைச் செய்யக் கடமைப்பட்டுள்ள நிலையங்கள் எவை? அவையே திருமடங்கள்.

மேல்நாடுகளில் அந் நாட்டவர் கிறித்துவ சமய வளர்ச்சிக்கெனச் சமயத்துறைப் பள்ளிகளையும் கல்லூரிகளையும் ஏற்படுத்தி மாணவர்களை இளமையிலிருந்தே கலையிலும் சமயத்துறையிலும் வேறு சில மொழிகளிலும் தேர்ச்சிபெறச் செய்கின்

றார்கள். குறைந்த அளவு பன்னிரண்டு ஆண்டுகள் சமயத் துறைக் கல்வியோடு பண்பாடுகளையும் வளர்க்கின்றார்கள். அங்ஙனம் தேர்ச்சிபெற்ற மாணவர்களே பின்னர்ப் பல்வேறு நாடுகளுக்கும் சமயத்தொண்டு செய்ய அனுப்பப் பெறுகின்றார்கள். அவர்கள் தாம் சென்ற சென்ற நாடுகளில் சமயத் தொண்டும் மொழித் தொண்டும் மக்கள் தொண்டும் செய்து நற்பெயர் பெறுகின்றார்கள். இங்ஙனம் நம் நாட்டிற்கு வந்தவர்களே பேரறிஞர்களான கால்டுவெல், போப்பையர், வீரமாமுனிவர் முதலிய சான்றோர்களாவர்.

இவ்வாறே நமது நாட்டில் உள்ள திருமடங்களும் சமய வளர்ப்புத் துறைக்கெனக் குறிப்பிட்ட அளவில் அறிவும் விருப்பமும் பண்பாடும் உள்ள மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கல்வி கற்பித்துத் துறவுள்ளத்தோடு வாழுமாறு பயிற்சியளித்தல் வேண்டும். அவர்களைக் கொண்டு நாளடைவில் உள்நாடு, வெளிநாடுகளில் பல கிளை நிலையங்களை ஏற்படுத்தி அவர்கள் வாயிலாக எல்லா இடங்களிலும் சமயமும் பண்பாடும் வளரச்செய்தல் வேண்டும்.

சில மடங்களுக்கு நிலங்களும் கட்டடங்களும் செல்வங்களும் மிகுதியாக இருப்பதால் அவற்றைப் பாதுகாப்பதிலும், வரவு செலவு கணக்குகளைச் சரிபார்ப்பதிலும் அறமன்ற வழக்குகளில் ஈடுபடுவதிலும், இன்னும் பல வழிகளிலும் தம் அரிய நேரத்தை அந்த மடங்களின் தலைவர்கள் செலவழிக்கின்றார்கள். தாம் செய்ய வேண்டிய சமயத்துறை வளர்ச்சிக்கு வேண்டிய செயல்களைச் செய்யமுடியாது இருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் கண்காணிக்க மடங்கள் தனித்தனி அதிகாரிகளை அமர்த்திவிட்டு அவற்றின் தலைவர்கள் சமயத்துறை தவத்துறைகளில் மட்டுமே அதிக நேரத்தைச் செலவிடுதல் வேண்டும்.

மடத்தின் தலைவரை அமர்த்தும்போது பெரியோர்களும் அறிஞர்களும் துறவிகளும் சேர்ந்து கலந்து ஆராய்ந்து அப்பதவிக்குத் தகுதியுடையவர் யாவர்? அவர்தம் வாழ்நாள் முழுவதும் எப்படிப் பயன்படுத்துவார்? அந்த மடத்தால் அடியார்களும் மக்களும் அடைய வேண்டிய நன்மைகள் யாவை? என்பவற்றை நினைந்து அதற்குத் தகுதியுடையவர்களையே அமர்த்துதல் வேண்டும்.

இளமையிலேயே கல்வியும் பண்பும் சமயவுணர்வும் உடையவர்களாய்த் திருமணஞ் செய்துகொள்வதில் விருப்பமில்லாதவராய், ஒழுக்கமுடையவராய்த் தம் உடல், பொருள் முதலிய

வற்றைப் பொதுப்பணிகளில் செலவு செய்பவராய்த் தந்நல மற்ற துறவுள்ளமும் செயல் திறமையும் உடையவராய் இருப்பவரையே தலைவராக அல்லது துணைத் தலைவராக அமர்த்துதல் வேண்டும். எடுத்துக் காட்டாக விவேகானந்தரைக் கொள்ளலாம். திருமணமானவர்களாயிருப்பின் திருச்செந்தூர் ஆறுமுக சாமி அவர்களைப் போலக் குடும்பப் பற்று சிறிதளவும் இல்லாதவர்களாயின் திருமடத் தலைவராதற்குத் தகுதியுடையவர்களாகக் கொள்ளலாம். குறித்த அகவை கடந்தபின் தலைவன் தலைவியர் இருவருமே, துறவு வாழ்க்கை மேற்கொள்ளுதலும் நன்றே. காஞ்சிபுரம் தொண்ட மண்டல ஆதினத்தின் தலைவராய் இருந்து அண்மையில் வீடு பேறடைந்த தவத்திரு ஞானப்பிரகாசர் அடிகள் பேரறிஞராக இருந்தும் குடும்பப் பற்று முற்றும் அருமையால் தமக்குப்பின் அம் மடத்துத் தலைவராய் இருக்கும் உரிமையை அப் பதவிக்குத் தகுதியற்ற தம் மகனுக்கு அளித்துள்ளார். இங்ஙனம் செய்திருப்பது அம் மடத்துச் சார்பாளர்கள் சிலருக்கே மனநிறைவற்ற சூழலை உருவாக்கியுள்ளது. எனவே சைவ மடத்துத் தலைவர் வீடுபேறு அடையின் அடுத்தபடி அப்பட்டத்திற்கு எந்தச் சைவ மடத்திலிருப்பினும் தகுதி பெற்ற ஒருவர் அமர்த்தப்பெற வேண்டும்.

வழிபாட்டுப் பெருமையும், வரலாற்றுச் சிறப்பும் வாய்ந்த மாபெருந் திருக்கோயில்கள் பல திருமடங்களின் ஆட்சியில் உள்ளன. படக்காட்சி, தொலைக்காட்சி முதலியனவெல்லாம் இக் காலத்தில் பெருக வளர்ந்துள்ளமையால் அவற்றைப் பயன் படுத்தித் திருக்கோயில் மாண்புகளையும், கலைச் சிறப்புகளையும் கல்வெட்டுச் சான்றுகள் முதலியவற்றையும் உலகெங்கும் பரப்புதலும், அறிவித்தலும், ஆராய்ச்சிக்கு ஆவன செய்தலும் மிகவும் எளியனவாம். திருமடங்கள் அவ் வகையில் முயலுவது நன்று.

பழங்காலத்தில் சமயப்பணி மொழிப்பணிகட்கும், மக்கட் பணிக்கும் என்றே மன்னர்களும் பொதுமக்களும் ஏராளமான செல்வங்களைத் திருமடங்களுக்கு வழங்கியுள்ளார்கள். அவற்றை நல்வழியில் செலவிட ஆவனசெய்தல் வேண்டும்.

அறநிலையத்துறை ஒவ்வொரு மடத்துக்கும் உறுதுணையாக இருந்து மறைந்து கிடக்கும் சொத்துகளை வெளியிற் கொண்டு வந்து பொதுமக்களுக்குப் பயன்படுமாறு செய்தல் வேண்டும். பொருளாதாரத்தினால் திருமடத்துத் தலைவர்கள் வருந்தாதவாறு தகுந்த உதவிசெய்தல் வேண்டும்.

சிவஞானபோத ஆராய்ச்சி

[அருட்டிரு அழகரடிகள்]

(சிலம்பு ௩௪, பரல் ௧௧, பக்கம் ௪௪௮ இன் தொடர்ச்சி)

இதைத்தான் எடுத்துக்காட்டு வெண்பா, 'எங்கும் உளன் என்ற அளவை ஒன்றன்று, இரண்டு என்னில் எங்கும் உளன் அன்று; அங்கண் அவை அவனன்றி யில்லை; பொன் ஒளி போன்றவன் ஈசன்' என்று விளக்கியது. இதில் பொன் என்னும் சூரியனும் ஒளி என்னும் கதிர்களும் பொருளுக்கும் அதன் ஆற்றலுக்கும் அதாவது இறைவனுக்கும் அம்மைக்கும் உவமையாகக் காட்டப்பட்டிருக்கின்றன.

சூரியன் வேறு; அதன் கதிர் வேறு. சூரியனின் தன்மை அன்று கதிர் என்னும் ஆற்றல்; சூரியனின் தன்மை கதிர் களுக்கு ஒளி கொடுத்துக்கொண்டு நிற்றல்; அந்தத் தனி ஒளி சூரியனை விளக்கப் பயன் படுவதில்லை; கதிர்களோடு கூடிய ஒளியே சூரியனை விளக்கும்; அறிவு, சிவத்தின் தன்மை யாயினும், அம்மையாகிய அன்பு முதலிய செயல்களோடு கூடிய அறிவுதான் (விவேகந்தான்) சிவத்துக்கும் பெருமை தரும். வெறும் பேரறிவு மட்டும் பெருமை கொடுத்து விடாது. வெறும் அறிவுக்கு மட்டும் செயலில்லை; அன்பு முதலியனதான் செயல்! சூரியனையே கதிர்கள் விளக்குகின்றன; உலகத்தையும் விளக்கு கின்றன. சூரியனுக்கு அப்படி விளக்க முடிவதில்லை. அறிவு இயல்பு அறிய முடியுமேயன்றிச் செயலுறாது. சூரியனை விளக்கும்போது சூரியன் விளக்கமாகத் தெரிகிறான். உலகத்தில் கதிர்கள் படியும்போது, உலகங்கள் விளக்கமாகத் தெரிகின் றன; அம்மை ஆற்றலின் அன்பு நிலை யிது!

காயும் கனியும்:

ஒருவனுக்கு ஆற்றல் என்பது அறிவன்று; அன்பு அருள் முதலியன தாம்.; அதனாலேதான் ஒருவர்க்கு 'அறிவும் ஆற்றலு முடைய ஐயா' என்று கடிதங்களும் எழுதுகிறோம். காய்க்கு ஓர் ஆற்றல் இருக்கிறதென்றால் அது கனிதலே; காயின் தன்மை சுவை வேறு; கனியின் தன்மை சுவை வேறு; இரண்டும் இருவேறு தன்மையுடையன போல ஆண்மையும் பெண்மைகளும் இருவேறு தன்மையுடையவை.

அதுபோல, 'சத்தி' என்பது இறைவனையும் விளக்குகிறது, உலகத்தையும் விளக்குகிறது, 'சத்தி' இல்லாமல் இறைவ

னுக்கு அங்ஙனம் விளக்கமுண்டாவதில்லை. ஆதலால் இறைவனாகிய அப்பனும் இறைவியாகிய 'சத்தி'யும் ஒன்றாகவே கூடி உடனாய் ஒரு பொருளாய் இருக்கின்றன. 'ஒருவனுக்கு ஒருத்தி' என்னும் ஆண் பெண் இயற்கை இயைபு, எல்லா உயர்வுகளினும் இதைப்போல் இருக்கிறது. ஆண்பாலால் முடிவது, பெண்பாலால் முடிவதில்லை. பெண்பாலால் முடிவது ஆண்பாலால் முடிவதில்லை. இதற்கு, மேல்வன்மையும் உள்வன்மையுமே காரணம். இரண்டும் ஒன்றை ஒன்று பிரியாது இருவர் இருவராய் ஒன்று கூடி உடனாய் இருப்பது, இரண்டாலும் ஆகக் கூடியவை ஆவதற்குத்தான்; 'இவை ஒன்றுக்கொன்று இன்றியமையாதன. உலகியலில், மனைவியால் கணவனும் கணவனால் மனைவியும், அதாவது அன்பு முதலியனவும் அறிவும் விளக்கப்படும் இன்றியமையாமை போன்றது!

பலவாயினும் ஒரே ஆற்றல் :

ஒரு 'சத்தி'யைப் பல 'சத்தி'களாகப் போற்றினாலும், எல்லாம் ஒரு 'சத்தி'யின் பிரிவுகளே. நெருப்பின் ஆற்றல், 'சுடும் ஆற்றல்' என்றும் 'ஒளி ஆற்றல்' என்றும் பெயர் பெறுவதைப் போன்றது இது. ஒரே 'சத்தியால்' இறைவன் விளக்கம் படுகின்றான்; அதாவது, அவன் அறிவின் தன்மையாகிய மேல் வன்மை, நீக்க வேண்டும் புற வீரத்தை வெளிப்படுத்துகின்றது. உலகத்தை அம்மை விளக்கும்போது எழில்களாய் அங்கங்கும் தோன்றி உள் உறுதியை அதாவது அக அருட் காதல் திறமையைப் புலப்படுத்துகின்றது. இறைவனை அம்மை நோக்கும்போது அவன் அறிவு (விவேகம்) விளக்கமடைகிறது. இறைவியை இறைவன் (விவேகம்) நோக்கும்போது, அம்மையின் செயல் விளக்கங்கள் (விவேகத்தோடு கூடிய காரியங்கள்) உலகுயிர்களை நோக்கி நிகழ்கின்றன. முன்னது 'சிவ சத்தி' அல்லது 'பராசத்தி' என்றும், பின்னது 'உலக சத்தி' அல்லது 'திரோதான சத்தி' எனவும் ஒரே சத்தியே பெயர் பெறுகின்றது.

ஒரு பொருளின் அறிவுத் தன்மையே தன்னை விளக்கிக் கொள்ளாது. 'ஆற்றல்' என்றும் அன்பு முதலிய செயல் தன்மைகளே அறிவையும் விளக்கும் வல்லமையுடையது; உலகத்தையும் விளக்கும் உள்ளுறுதி மிக்கது. ஆதலால், 'சத்தி'யே இறையையும் விளக்குவதாய் உலகத்தையும் விளக்குவதாய் உள்ளது.

இனி, அப்பனின் அறிவினால் அல்லாமல், அம்மையின் செயலாற்றலுக்கு, அறிவு நலம் (விவேகத் தன்மை) பிறப்பதா

யில்லை. அறிவின்றி (ஞானம்) அன்பு முதலியன (இச்சை) விளைவதில்லை; இரண்டும் சேர்ந்த செயலும் (கிரியையும்) உண்டாவதில்லை. ஆதலால், அப்பன் 'சத்தியும்' அம்மைக்கு வேண்டும்; அம்மையின் 'சத்தியும்' அப்பனுக்கு வேண்டும். இறைவன் கலப்பின்றி அம்மையும் செயல்படுவது இல்லை. அதனாலேதான் அம்மையோடு அவன் இரண்டறக் கலந்திருக்கிறான். 'ஆணையின் நீக்கமின்றி நிற்றலால்' உயிர்கள் இருவினை காரணமாகப் போக்கு வரவுகள் புரிகின்றன!

உலகம் ஒன்றுதான். எல்லாக் கண்டுபிடிப்புகளுக்கும் கருவியாய் இருக்கிறது. உலகத்தைப் போலவே சிறிய உலகமாய் உடம்பு இருக்கிறது. உடம்பை ஆராய்வது எளிது. உடம்பில் உயிர் இருப்பதனால் உலகத்தை ஆராய்வதைவிட உடம்பை ஆராய்வது சிறப்பாகவும் இருக்கிறது. அது, உலகத்தையே ஆராய்ந்த வகைதான்.

சிவஞான போதத்தின் முதல் நூற்பா நிமித்த காரணனாகிய கடவுள் உண்மையைக் கூறியது. முதற்காரணம் துணைக் காரணங்களாகிய மலங்களின் உண்மையை இரண்டாம் நூற்பா விளக்கியது. இக்காரணங்களாற் பயன் கொண்டு முன்னேறுவது உயிராதலால், உயிரின் உண்மையை மூன்றும் நூற்பா கூறுகிறது.

கடவுள், உலகம், உயிர் என்னும் இம்மூன்று பொருள்களின் உண்மைகளை இம்மூன்று நூற்பாக்களின் மூலம் நாம் அறிந்து கொள்கிறோம். உடம்பு ஒரு சிறிய உலகமாதலால், அதனையே ஆராய்ந்துகூட இம்மூன்று பொருள்களையும் நன்கு கண்டு கொள்ளலாம். மேலும், உடம்பு என்பது உயிர்களுக்கு மிக அணுக்கமாக உள்ளது. உயிர் அதனுள் இருக்கிறது. உலகத்திலேயே உயிர் இயைந்துள்ள சிறிய உலகம் உடம்புதான். ஆதலால் உயிரை அறிந்துகொள்வதற்கு மிகவும் துணை புரியும் உடம்பை எண்ணிப் பார்க்கலாம்.

மூன்றும் நூற்பா பின் வருமாறு:

"உளது இல தென்றலின், எனதுட லென்றலின்,
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின், கண்படில்
உண்டிவினை யின்மையின், உணர்த்த வுணர்தலின்,
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா"

இந்த நூற்பா உடம்பின்மேல் வைத்து ஓதுதலாகவே உள்ளது.

'உளது' என்பது, நூற்பாவின் கடைசி சொல்லாகிய ஆன்மா என்பதை எழுவாயாகக் கொண்டுள்ளது. ஆகவே,

'ஆன்மா உளது' என்பது தொடர். 'ஆன்மா உளது' என்று ஒட்டிப் பொருளுரைக்கற்பாற்று என்று ஆசிரியர் மெய்கண்டார் கூறினர்.

உண்டோ இல்லையோ என்று ஐயுறுவார்க்கு, 'உளது' என்று முதலிற் சொல்ல வேண்டுவது கட்டாயமாயிற்று.

முதற்சொல்லும் கடைசிச் சொல்லும் இப்படி ஒன்றுக்கொன்று தொடராய் அமையும் இயைபு உடையதாய் இருப்பதனல், இப்படி வளைந்து பொருள் கொள்ளும் வகையைப் 'பூட்டு வில்' என்று இலக்கண ஆசிரியர்கள் சொல்லுவார்கள். ஒரு பூட்டினுடைய தலைப்பின் இருபக்கங்களும் வளைவு பொருந்தியுள்ளன. அதுபோல நூற்பாவின் கடைசியும் முதலும் இயைந்து பொருள் கொள்ளும்படி ஒரு தொடராய் உள்ளன. ஆதலால், இம்முறைமை 'பூட்டு வில் பொருள் கோள்' என்ருயிற்று.

ஆன்மா உள்ளது என்று ஒருமையில் சொன்னலும் எல்லா ஆன்மாக்களுக்கும் இது பொருந்தும். தன் சாதியை இப்படித் தழுவி, 'உளது' என்று ஒருமையில் வருவதனல், இது 'சாதி யொருமை' எனப்படும்.

நூற்பாவில் வரும் மற்றத் தொடர்களெல்லாம் 'ஆன்மா உள்ளது' என்பதற்கே காரணங்களாய் உள்ளன. 'ஆன்மா உள்ளது' என்பது நூற்பாவின் மேற்கோள். அதற்கு மற்றவை காரணங்கள்; இவ்வாறு இந் நூற்பா, 'மேற்கோள்' 'காரணங்க ளுடன் வந்தது.

'மாயா இயந்திர தனு' என்பது உடம்பு. இது, மாயையால் ஆனது, கருவிகளோடு கூடியது; ஆதலின், 'மாயா இயந்திர தனு' எனப்பட்டது; 'தனு' என்பது உடம்பு; 'இயந்திரம்' என்பது பொறி; இங்கே கருவிகளை உணர்த்திற்று. இயங்குவது இயந்திரம்; எந்திரம் என்று கொச்சையாய் வழங்குவதும் உண்டு; 'மாயா இயந்திர தனு' என்னும் அதுவும் ஆன்ம உண்மைக்கு ஒரு குறிப்பேதுவாக இருக்கிறது. வெளிப்படையாய் இல்லாமையாலும், காலம் தெரிவிக்கும் வினைச்சொல் சேராமல் பெயர் அடைமொழியாய் இருப்பதனலும் 'மாயா இயந்திரம்' என்னும் அடைமொழியே ஒரு காரணமாய்ப் பயன்பட்டு வருவதனலும், இது, 'குறிப்பு ஏது' எனப்பட்டது.

ஆன்மா என்று தனியாக ஒன்று உண்டோ இல்லையோ? எனச் சிலர்க்கு ஐயங்கள் தோன்றின. அந்த ஐயங்களையெல்லாம் எட்டு வகையில் பிரிவு செய்துகொண்டு சான்ருேர்

ஆராய்ந்தனர். அவற்றுள் ஒரு வகை, நான்காம் நூற்பா வினால் விளங்கும். அந் நூற்பாவில் மற்ற இயைபுகளை விளக்கும்போது இக் கருத்துப் புலப்பட்டுவிடுகிறது ; ஏனை ஏழு வகைகளில், ஆறு பிரிவுகள், வெளிப்படையான காரணங்களாலும், ஒரு பிரிவு குறிப்புக் காரணத்தாலும், 'ஆன்மா உண்டு' என்பதை, இம் மூன்றும் நூற்பா விளக்குகின்றது. சிவஞான போதத்தின் மூன்றும் நூற்பா, இவ்வாறு ஏழு பிரிவுகள் உடையதாக வரையறுத்துக்கொள்ளப்பட்டது.

நூற்பாவின் மொத்தக் கருத்தை 'ஆன்மப் பிரகாசம் உணர்த்துதல் நுதலிற்று' என்று மெய்கண்டார் கூறிக்கொள்வார். 'ஆன்ம ஒளியை உணர்த்துதல் நுதலிற்று' என்பது இதன் பொருள். ஆன்மாவை உணர்த்துதல் என்று கூருமல், 'ஆன்ம ஒளியை' உணர்த்துதல் என்றமையால், ஆன்மா ஓரளவு ஒளியுடையது; அதாவது 'ஓரளவு அறிவு உடையது' என்பதும் தெரிந்துகொள்ளலாம்.

இந் நூற்பாவில் பெரும்பாலும் காரணங்களே வருகின்றன. அவை, ஏழு; ஒவ்வொன்றும் ஒவ்வொரு பிரிவு; 'ஆன்மா உளது' என்பது, இப் பிரிவுகள் ஏழுக்கும் பொதுவான மேற்கோள். ஆதலால், 'ஆன்மா உளது என்று எங்கும் பொருளுரைக்கற்பாற்று' என்ருர் ஆசிரியர். தனித்தனிப் பிரிவுகளில் காரணமும் எடுத்துக்காட்டுகளுமட்டும் கூறப்படும். 'ஆன்மா உளது' என்னும் மேற்கோளை அங்கங்கும் இயைத்துக் கொள்ளலாம்.

சிவஞானபோதத்தில் மற்ற நூற்பாக்களுக்கும் இந் நூற்பாவுக்கும் ஒரு வேறுபாடு. மற்ற நூற்பாக்களின் பிரிவுகளைச் சொல்லும்போது ஒவ்வொரு பிரிவுக்கும், நூற்பாவிற் கூருத காரணங்கள் அங்கங்கும் வேறு வேருக வரும். ஆனுல் இந்த நூற்பாவில், பிரிவுகளுக்குச் சொல்ல வேண்டிய காரணங்கள், நூற்பாவிலேயே வந்துவிடுகின்றன. ஆதலால் நூற்பாக்களின் காரணங்களே பிரிவுகள் ஆயின. அவற்றிற்குப் பொழிப்புரைகளும் எடுத்துக்காட்டுச் செய்யுட்களு மட்டும் ஆசிரியர் கூறுகிருர்.

முதல் பிரிவு :

எல்லாப் பிரிவுகளுக்கும் மேற்கோள், 'ஆன்மா உளது' என்பது. இதற்கு முதன்முதலாகக் கூறப்படும் காரணம், 'இலது என்றலின்' என்பது. அதுவே முதற் பிரிவாயிற்று. இப்படியே மற்றவையும்.

'இல்து' என்று சொல்வது எதுவோ அதுதான் 'ஆன்மா' என இப் பிரிவு காரணங் காட்டுகிறது.

'வெறும் பாழே' (சூனியமே) உயிர் என்பவரும், 'உடம்பே' உயிர் என்பவரும், 'பொறிகளே' உயிர் என்பவரும், 'உட்கருவி களே' உயிர் என்பவரும், 'கருவிகளின் கூட்டமே' உயிர் என்ப வரும், 'அறிவே' உயிர் என்பவரும், 'நுண்ணுடம்பே' உயிர் என்பவரும், 'மூச்சே' உயிர் என்பவருமாக எட்டு வகையான ஐயங்கள் தோன்றியவர்கள் உண்டு. இவையெல் லாம் உயிரல்ல என்று மெய்கண்டார் நிறுவுகிறார். இவற்றில் 'உட்கருவிகளே' உயிர் என்பவரின் ஐயம் நான்காம் நூற்பா வில் தீர்க்கப்படுகிறது. மற்ற ஏழு வகையான ஐயங்களை இந்த மூன்றும் நூற்பா தீர்த்து வைக்கிறது.

ஏழு ஐயங்களுக்கும் ஏழு பிரிவுகளை வகுத்துக்கொண்டு, ஒவ்வொரு பிரிவிலும் அவரவர் ஐயம் தீர்வதற்கு விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. அவற்றில் முதலில் வரும் ஐயம், 'ஆன்மா என்பதே இல்லை, வெறுமை தான் (சூனியம்) காணப் படுகிறது. வெறுமை உயிராகுமா?' என்பது. இத்தகைய ஐயம் புத்த மதத்தில் ஒரு பிரிவினராகிய 'மாத்துவிகர்' என்ப வர்க்கு உண்டு. மாத்துவிகரைப் போன்றோர், இப்போதும் இருக்கிறார்கள்; எதிர்காலத்திலும் இந்த ஐயம் எழக்கூடும். இவர்களையெல்லாம் பொதுவாக, முன்பு, 'புத்தர்' என்றனர். பிரித்துச் சொன்னால் 'மாத்துவிகர்' எனப்படுவர். 'முயற்கோடு இல்லை' என்று ஒருவன் சொன்னால், முயற்கோடு என்பதும் பாழ், இல்லை என்பதும் பாழ் என்றுதானே பொருள் எனவும் அவர்கள் சொல்லுவார்கள்; அப்படிச் சொல்லிக்கொண்டு நிற்பது எது என்பதே மெய்கண்டார் கேள்வி.

மெய்கண்டார் இத்தகையவர்களை மறுத்து 'உயிருண்டு' என்று நிறுவுவது ஒரு வியக்கத்தக்க வல்லமையாயிருக்கிறது. 'இல்லை என்று சொல்லுகிற நீ யார்?' என்று இங்ஙனம் அவர் கேட்கின்றார்; அப்படிச் சொல்லுகிற உன்னைத்தான் உயி ரென்று சொல்லுகிறோம் என்கிறார். ஆதலால், 'உயிர் என்பதை இல்லையென்று சொல்லாதே, அது உண்டு' என்பது அவர் கருத்து.

'இலது என்றலின்' என்று வரும் தொடருக்குப் பொழிப் புரை யொன்று அவர் கூறுகிறார். பொழிப்புரையா அது? விளக்கவுரை என்றுதான் கூறவேண்டும். 'எவற்றினையும் அன்று அன்று என விட்டு ஆன்மா இலது என்று நிற்பது உண் டாகலின் அதுவே அவ் வான்மாவாம்' என்பது.

அன்று அன்று எனவிட்டு—இது ஆன்மா அன்று, இது ஆன்மா அன்று என எவற்றினையும் நீக்கிவிட்டு, இலது என்று நிற்பது உளதாகலின்—உயிர் இல்லையென்று சொல்லிக் கொண்டு நிற்பது உள்ளதாகலின்.

ஆன்மா உளது என்பது முடிபு. 'எல்லாவற்றையும் இது உயிரன்று இது உயிரன்று என்று நீக்கிவிட்டவழிக் கடைசியில் உயிரென்று ஒன்றையுங் காணேம். வெறுமைதான் காணப்படுகிறது என்று சொல்லுகின்ற அறிவு எதுவோ அதுதான் உயிர்' என்பது கருத்து.

அந்த அறிவும் பாழே என்பர் 'மாத்துவிகர்'. அதுவுந் தவறு சொல்லுவோன் உலகத்தில் இருக்கும்போதே 'என்னைப் பெற்றெடுத்தவள் ஒரு மலடி, என்று சொன்னால் எப்படி? அதற்குப் பொருளிருக்குமா? மலடி குழந்தை பெறமுடியுமா என்று யாரும் என்னுவர்.

இனி, ஆன்மா இல்லையென்று சொல்லுகிறவர், உடம்பில் ஒவ்வொன்றையும் கவனித்துப் பார்த்த பின்பே சொல்லுவர்; ஆதலால், ஆசிரியர், 'எவற்றையும் அன்று அன்று என விட்டு' என்று பொழிப்புரை கூறிக்கொண்டார். அதனாலும் இந்த முதற்பகுதி மற்றப் பகுதிகளுக்குத் தோற்றுவாயாக முடிகிறது. ஏனென்றால், உடம்பின் மற்றப் பொருள்களாகிய 'பொறிகள்' 'நுண்ணுடம்புகள்' முதலியனவெல்லாம் உயிரல்ல என்பதே அடுத்த அடுத்த பிரிவுகளில் வருகின்றன. அவற்றிற்குக் காரணங்களும் விளக்கங்களும் அங்கங்கும் வேறு வேறு வரும். உடம்பின் பொருள்களாகிய பொறிகள் நுண்ணுடம்புகள் முதலியவற்றை அன்று அன்று என நீக்கி ஆன்மாவைக் காணும் காரணம், இம் முதல் பிரிவில் வந்தது.

இதற்கு எடுத்துக்காட்டுச் செய்யுள் ஒன்று வருகிறது.

> *"அன்றன் றெனஙின் றனைத்தும்விட் டஞ்செழுத்தாய்*
> *நின்றென் றுளததுவே நீஅனைத்தும்—நின்றின்று*
> *தர்ப்பணம்போற் காட்டலால் சார்மாயை நீ அல்லை;*
> *தற்பரமும் அல்லை; தனி."*

இந்த எடுத்துக்காட்டு வெண்பாவில், 'நீ தனி' என்னும் கருத்து வருகிறது.

உடம்பு மாயை எனப்படும்; ஆதலால் அதன் பிரிவுகளெல்லாம் நீயாகமாட்டாய்; அதனால் இம் 'மாயையுடம்பு நீ அல்லை, மாயையால் நின்னறிவு விளங்கவேண்டி யிருப்பதனால்,

தானே அறியக் கூடிய, தனக்குத் தானே பரமாகிய கடவுளும் நீ அல்லை; நீ தனி என்றார்.

இந்நூற்பாவில், 'மாயையின் பிரிவுகளும் நீ யாகமாட்டாய், கடவுளும் நீ யாகமாட்டாய், உயிரென்பது தனிப் பொருள்' என்று வருங் கருத்து, மற்றப் பிரிவுகளுக்கும் பொருந்தும். இஃது இந்த எடுத்துக் காட்டுச் செய்யுளால் மட்டும் விளங்குவதாகும். மற்றப் பிரிவுகளுக்கும் அதனால் இது தோற்றுவாயாயிற்று.

பாட்டின் பொருள் :

அனைத்தும் நின்று – உடலின் பிரிவுகள் எல்லாமாய்க் கலந்து நின்று, அன்று அன்று என விட்டு – இது நானன்று இது நானன்று என்று அறிந்து நீக்கிவிட்டு; அஞ்செழுத்தாய் நின்று ஒன்று உளது – அகரம் முதலிய நுட்ப ஐந்தெழுத்தாய் அங்ஙனம் அறிந்து வந்து, நிலை நின்றதோர் அறிவு உண்டு; அதுவே நீ – அதுதான் உயிரென்ற நீ; அனைத்தும் நின்று இன்று தர்ப்பணம் போல் காட்டலால் – எல்லா உடற் கருவிகளுமாய் இருந்து இந்தப் பிறப்புக் காலத்தில் கண்ணாடிபோல் அறிவித்தலால், சார்மாயை நீ அல்லை – சார்ந்த மாயை மலம் நீ யாகமாட்டாய்; தற்பரமும் அல்லை – ஒருகால் கடவுளே நீ தானோ என்றால் அதுவும் ஆகமாட்டாய்; தனி – ஆதலால், உயிரென்னும் நீ ஒரு தனிப்பொருள்.

இந் நூற்பாவில் கண்ணாடி ஓர் எடுத்துக்காட்டாய் வருகிறது. கண்ணுக்கு மூக்குக் கண்ணாடி; பொருள்களை விளக்கமாகக் காட்டுகிறது. ஆனால் அக் கண்ணாடிக்கு அறிவில்லை. அது விளங்கக் காட்டும் பொருள்களுக்கும் அறிவில்லை. உடலும் உடல் கருவிகளும் அப்படி அறிவற்றவையாயிருக்கின்றன; அறிவற்ற உலகப் பொருள்களை அறிவில்லாத அக் கருவிகள் காட்டுகின்றன. அதற்குக் காரணம், அவை அறிவுள்ள உன்னைச் சார்ந்திருப்பதேயாகும். ஆதலால், சார்ந்திருக்கிற அந்த மாயை நீ யாகமாட்டாய்.

ஒருகால் இன்னோர் எண்ணமும் தோன்றலாம். பெரிய அறிவுடைய பொருள் கடவுளாதலால் அறிவுள்ள உயிர் என்பது அதுதானோ? என்று தோற்றலாம். அதுவோ தற்பரம்; தனக்குத் தானே பரம்; தனக்குத் தானே அறிவுடையது; உயிரோ அங்ஙனமன்று; எதனையும் தானே அறிந்து கொள்ளாதது; அறிவிக்க அறிவது, கடவுள் அறிவிக்க முதலில் மாயையால் விளங்குவது; இங்ஙனம் ஓரளவு ஆன்மா அறிவுடைய பொரு

னாய் இருக்கிறது. அறிவதாலும் அறியவேண்டுமே; அவ் வறிவை ஆன்மா உடைய; அதனால் அஃதோர் அறிவுப் பொருளாயிருக்கிறது. ஆசிரியர் முதலிலேயே நூற்பாக் கருத் துரைக்கும்போது 'ஆன்ம உண்மையை உணர்த்துதல்' என்னா மல், 'ஆன்ம ஒளியை உணர்த்துதல்' என்று அதன் அறிவு விளக்கத்தை நினைத்துக் கருத்து கூறிக்கொண்டார்.

உயிர் அஞ்செழுத்தாய் உள்ளதென்பதை அடுத்த நூற்பா விளக்குகின்றது. இங்கே அஞ்செழுத்தாய் உள்ளது என்று மட்டும் பொதுவாய் உயிரை அறிந்துகொள்ளலாம். ஏனென் றால், அஞ்செழுத்துக்களின் ஐவகை ஆற்றலால் ஐந்து பொறி களையும் இயக்கி ஐம்புலப் பயன்களை உயிர் அறிகின்றது. அடுத்த பிரிவுக்குரிய எடுத்துக் காட்டுச் செய்யுளில் இந்த ஐவகைத் தொழிற்பாடும் அஞ்செழுத்து என்றே வருகின்றது.

உலகத்தில் இது நானன்று இது நானன்று என்று விலக்கும் அறிவு, அப்படி விலக்கப்படுவனவற்றிற்கு வேருதலால், வேரு யிருக்கும் அப் பொருளுக்கு 'அஞ்செழுத்தாய்' என்று ஒரு வடிவம் சொல்லி, அதனை 'அடையாளம்' என்றுங் கூறினர்.

இரண்டாம் பிரிவு:

அப்படி 'ஆன்மா' என ஒன்று உண்டாயினும், 'உடம்பு தான் அந்த ஆன்மா' என்பவரை மறுப்பது, இரண்டாம் பிரிவு; உடல் வேறு உயிர் வேறு என்று காட்டுவதற்கு, 'எனதுடல் என்றலின்' என்பது இரண்டாவது காரணமாயிற்று; உடம்பே ஆன்மா என்று ஐயப்படுவோர்க்குப், பலரும் 'எனது உடல்' என்று வழங்குவதனால், அந்த வழக்கில், 'எனது என்னும் நீயே ஆன்மா' என்றார்.

ஐயப்படுவோர், உடம்பில் அறிவு நிகழ்ச்சியை அறிதலால், உயிர் என்பது உடம்பு தான் என்று நினைக்கின்றனர். உடம் பையே சிலர், உலகத்தில், நான் என்று உண்மையில் நம்பி விடுகின்றனர்; அஃது இப்படி ஐயப்படுவதற்கு இடஞ்செய் கிறது. உடம்பு பருப்பதை நான் பருத்தேன் என்கின்றனர். உடம்பு மெலிந்ததை நான் மெலிந்தேன் என்று நினைக்கின் றனர். இப்படி உடம்பையே தானாக நினைத்துவிடுவதனால், உடம்புதான் உயிரோ என்று நினைக்கும்படி நேர்ந்துவிடு கிறது.

பலர் இதனைப் பகுத்து அறிவதில்லை. பகுத்தறிவு இதற்குப் பயன்படுவதுமில்லை. உடம்போடு உயிர் ஒன்றி யிருப்பதனால் தான் பருத்தேன், நான் மெலிந்தேன் என்று, உடம்புக்குரி

யதைத் தனதாக்கிக் கொள்கின்றனர். பிறிதின் கிழமையைத் தற்கிழமையாகக் கொண்டு விடுகின்றனர்.

அதற்காக, மெய்கண்டார், அது பிறிதின்கிழமையே அதாவது, 'உடம்பு என்பது உயிருக்கு வேறு பொருளே' என்று, உண்மையை எடுத்துக் காட்டுகிறார். 'எனது உடல்' என்னும் போது 'நான் உடல்' என்று பொருளாகாதே என்பது அவர் கருத்து.

'நான் கை' 'நான் கால்' என்றெல்லாம் உலகத்தார் சொல்லுவதில்லை. அப்படிச் சொன்னால், 'நானே கை' 'நானே கால்' என்று பொருள் செய்து விடலாம். ஆனால், 'எனது கை' 'எனது கால்' 'எனது உடல்' என்பவைதாம் வழக்காயிருக்கின்றன. 'எனது உடல்' என்று கூறும்போது பிறிதின்கிழமையாய் யான் வேறு உடல் வேறு என்று வேற்றுமையில் பொருளாகிறது.

"யான் வேறு, என் உடல் வேறு, செகத்து யாவும் வேறாக"

என்பார் அருணகிரியார்.

'என் ஊர்' 'என் வீடு' என்பவற்றில் ஊரும் வீடும் வேறான பொருள்கள்; இப்படி வேற்றுமைப்பட வருவதைத் தான் 'பிறிதின் கிழமை' என்று இலக்கண ஆசிரியர்கள் கூறுகிறார்கள். இவை 'தற்கிழமை' யல்ல.

அப்படியானால், 'என் உயிர்' 'என் அறிவு' என்பனவும் 'பிறிதின் கிழமை' யாகுமா? அதாவது உயிருக்கு வேறான பொருளாகுமா? என்று கேட்கத் தோன்றும். என் உயிர் என்னும்போது 'என் மூச்சு' என்பது பொருள்; 'என் அறிவு' என்னும்போது பாசம் பற்றிய எனது பாச அறிவு என்பது பொருள். சிவஞானமுனிவர் தமது சிற்றுரையில், "என் பிராணன் என் அறிவு என இவ் வழக்க மிகுதிப்பாடு, பிறிதின் கிழமைப் பொருட்கண் அன்றி வாராமையான்" என்று கூறுவர். இதனால், பாசம் பற்றிய அறிவு ஒரு காலத்தில் நீங்குதற்குரியதாதலின், பாச அறிவு உயிர்க்கு வேறானது எனவும் தெரிந்து கொள்ளலாம். உடம்பே உயிர் என்பவர்கள் உலோகாயதர்; உடம்பு பருப்பதையும் சிறுப்பதையும் முதுமறை உயிருக்கு ஏற்றி, நான் பருத்தேன் நான் சிறுத்தேன் என்று உலகத்தார் வழங்குவதனால், உடம்பே உயிர் என்னும் துணிபு அவர்களுக்கு உண்டாய்விட்டது. உடம்பு பருப்பதற்கும், சிறுப்பதற்கும் காரணம் உயிரின் செய்கையானதனால், உலகத்தார் அவ்வாறு வழங்குகின்றனர். 'எனது உடல்' என்னும்போது அப்படி ஒரு

காரணம் தோன்றுவதில்லை. அதனால் உடல் வேறு உயிர் வேறு என்றே முடிக்க வேண்டியிருக்கிறது.

'எனது உடல் என்றலின்', என்பதற்கு வரும் பொழிப்புரையில் 'என் பதி என் மனை என்றாற்போல' என்பதற்கு 'என் ஊர்' 'என் வீடு' எனப் பிறிதின் கிழமையிற் சொல்வதைப் போல; என்பது பொருள். 'என நிற்பது உளதாதலின்' என்பதற்கு என்று சொல்லிக்கொண் டிருப்பது இருத்தலின்; என்பது பொருள்.

இப்படிச் சொல்லும்போது வேறோர் ஐயமும் அவர்களுக்கு உண்டாகிறது. பாம்பின் தலை என்னும்போது பாம்பு வேறு தலை வேறு என்று நினைப்பதில்லை; அதாவது பிறிதின் கிழமைப் பொருளாகக் கொள்வதில்லை; பாம்பின் உடலும் தலையும் ஒரு பொருளாகவே அதாவது தற்கிழமைப் பொருளாகவே உலகத்தார் கொள்கின்றனர். அதுபோல 'எனது உடல்' என்பதையும் தற்கிழமைப் பொருளிற் கொண்டால் என்ன? என்று கேட்கத் தோற்றும். அங்கே, பாம்பு என்றது பாம்பின் உயிர், அதன் தலை என்னும்போது அதற்கு அது பிறிதின் கிழமையே. ஆதலால் 'எனது' என்பதில் வேற்றுமையே தோன்றும்.

இக் காரணத்துக்கு எடுத்துக்காட்டுச் செய்யுள் ஒன்று உள்ளது. இதில் எடுத்துக்காட்டு ஏதுமில்லை; விளக்கத்துக்காகவே வருகின்றது.

"எனதென்ற மாட்டின் எனதலா தென்னது,
உனதலா துன்கைகால் யாக்கை—எனதென்றும்
என்அறிவது என்றும் உரைத்து நீ நிற்றிகாண்,
உன்னில், அவை வேறாம்; உணர்."

பொருள் :

எனது என்ற மாட்டின்—'எனது' என்னும் ஆறாம் வேற்றுமைச் சொல்லின் தொடர்பால்; எனது அலாது என்னது—எனது அல்லாதது என்னுமல், உனது அல்லாது உன் கை கால் யாக்கை—உனது அல்லாததாகிய உன் கை கால் யாக்கையை; எனது என்றும் என் அறிவது என்றும்—எனது கை என்றும் எனது கால் என்றும் எனது யாக்கை என்றும், அப்பாச அறிவை என் அறிவு என்றும்; உரைத்து நீ நிற்றி—தற்கிழமைப் பொருள்களாகச் சொல்லிக்கொண்டு, நீ வேறொரு பொருளாக நிற்கின்றாய்; காண் - இதனைக் கண்டு கொள்; உன்னில்-ஆராய்ந்து பார்த்தால்; அவை வேறு ஆம்—அக் கை கால் யாக்கையும் அறியும் பாச அறிவும், உனக்கு வேறு

பொருள்களாகும்; உணர்—நீ இவ்வுண்மையை உணர்ந்து கொள்வாயாக!

பொழிப்புரையால் விளக்கியது போதவில்லை; 'என் அறிவு' 'என் உயிர்' எனவும் வழங்கி வருதலால், அவற்றிற்கும் விளக்கம் வேண்டியிருக்கிறது; 'பொழிப்புரை' என்பது காரணத் தொடரின் விளக்கம்; அதில் கூறமுடியாத விளக்கங்களெல்லாம் இந்த எடுத்துக்காட்டுச் செய்யுளில் வரும். ஆதலால் இச் செய்யுள் ஒவ்வொரு பிரிவுக்கும் தேவையாயிற்று. பாச அறிவும் உயிருக்கு வேறு என்னும் ஒரு கருத்து இப் பாட்டில் வருகின்றது. 'எனது' என்ற தொடர்பு வேற்றுமையுறுதலைக் காட்டுகிறது. பாச அறிவும் இதனால் உயிருக்கு வேறு என்று தெரிந்தது.

முதல் இரண்டு வரிகள் பொழிப்புரை விளக்கமே கூறுமாயினும், அதிலும் ஒரு தனி விளக்கம் வருகின்றது. 'எனது' என்ற சொல்லின் தொடர்பு வேற்றுமையை உண்டு பண்ணிக் 'கை கால் உடம்பு என்பன உயிருக்கு வேறு பொருள்களே' என்பதற்குக் காரணமாவதோடு, 'பாம்பின் தலை என்றாற்போல ஒரு பொருளன்று' என்பதற்கும் தெளிவும் விளக்கமும் தேடித் தந்தது; மாட்டினால் வேறு கருத்துக் கொள்ளற்க என்பதற்கு மாட்டின் என்பது வந்தது.

யாக்கை என்பதில் கை கால் என்பனவும் அடங்கும். எனது யாக்கை என்று கொண்டால், யான் வேறு உடம்பு வேறு எனப் பிரித்துக் காட்டும்; அது பிறிதின் கிழமையே; 'எனது கை' 'எனது கால்' என்று கொண்டால் உடம்பிலிருந்து அவ்வுறுப்புகள் வேறுபடாமையால், அவற்றைத் தற்கிழமைப் பொருளாகக் கொள்ளலாகாதா என்று ஒரு நினைவு தோற்றும். உடம்பே உயிருக்கு வேறு பொருள் எனப்படுதலின், உடம்பின் பிரிவுகளாகிய உறுப்புகளும் உயிருக்கு வேறானவையே; என்பது தானே பெறப்படுமே!

இந்தப் பாட்டில், யாக்கையும்; தற்கிழமைபோல் தோற்றும் கை கால்களும், உயிருக்குப் பிறிதின் கிழமையே எனவும், உயிருக்குத் தற்கிழமைபோல் தோற்றும் அறிவும் உயிருக்குப் பிறிதின் கிழமையே எனவும், விளக்கம் வந்தது. காரணங்களிலும் மேற்கோள்களிலும் அவற்றின் பொழிப்புரையிலும் காணப்படாத உண்மைகள், காணப்படாத கருத்துகள், பாட்டில் இங்ஙனம். வருதலால், இவ் வெடுத்துக்காட்டுச் செய்யுட்கள் விளக்கத்துக்கு இன்றியமையாதவாயின.

பாட்டில், 'உளதலாது உள் கைகால் யாக்கை' என்று வந்த தொடரில், அலாது என்னும் ஒருமை, கை கால் யாக்கை எனப் பன்மையாகிய பலவற்றோடு சேர முறையில்லாமையால், 'அலாததாகிய கை' 'அலாததாகிய கால்' 'அலாததாகிய யாக்கை' எனத் தனித் தனி ஒருமையிற் சேரும் என்று சிவஞான முனிவர் உரைத்தார். 'அலாத உள்' என்று பிரித்துக் கொண்டால் தனித்தனியாகச் சேர்க்க வேண்டுவதில்லை.

மூன்றும் பிரிவு :

நூற்பாவில் 'ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின்' என்று வருவதை 'ஐம்புலன் அறிதலின்' 'ஒடுக்கம் அறிதலின்' என்று இரண்டு காரணங்களாகத் தனித்தனியாகப் பிரித்து, 'ஐம்புலன் அறிதலின்' என்பதை மூன்றும் பிரிவாகவும் ஒடுக்கம் அறிதலின் என்பதை நான்காம் பிரிவாகவும் கொள்ளவேண்டும். செய்யுளாதலால் இவ்வாறு ஒன்றாய் வந்தது. இப்படி வருவது செய்யுள்களுக்கு உரியதே. அதுவும் நூற்பாவாதலின், பொதுவான செய்யுளைவிட மிகச் சுருக்கமாகவும் திட்ப நுட்பமாகவும் வருகின்ற அதனில், இவ்வாறு சேர்ந்துவருவது இயல்பே; விளக்கம் செய்வோர், அதனைப் பிரித்து விளக்கிக் கொள்வது முறையாகும்.

இந்தப் பிரிவு, 'பொறிகளே உயிர்' என்பவரை மறுக்கின்றது; உடம்பில் பொறிகள் அறிவனவாயிருப்பதனால் 'புலனறிவே அறிவுடைய ஆன்மா' என்று சிலர் நினைத்துவிடுகின்றனர்; ஆன்மாவை அறிவுப் பொருள் என்பதனால், உடம்பில் அறிதலையுடைய ஐம்பொறிகளே ஒருகால் ஆன்மாவாயிருக்கலாமோ, என்று நினைக்க நேர்ந்துவிட்டது.

'ஐம்புலன் அறிதலின்' என்பதில், ஐந்து புலன்களையும் அறிவது வேறொன்று உண்டாதலின், அப்படி அறிவதுதான் ஆன்மா என்று அதற்கு ஒரு காரணம் இங்கே காட்டப்பட்டது.

இதற்குப் பொழிப்புரை,

> 'ஐம்புலனாகிய சத்தப் பரிச ரூப ரச கந்தங்களை இந்திரியங்கள் ஒன்று அறிந்தது ஒன்று அறியாமையின், இவ் வைந்தினாலும் ஐம்பயனும், அறிவது உளதாகலின் அதுவே அவ் வான்மாவாம்'

என்றது.

ஐம்புலன்களைச் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று சொல்லுவதுண்டு. திருவள்ளுவரும் கூறுவார்.* அவற்றை இப்பொழிப்புரை, சப்த பரிச ரூப ரச கந்தங்கள் என்றது.

ஐம்புலன்களில், ஒன்று அறிந்தவை ஒன்று அறியாது. இவ்வாறு இப் பொழிப்புரையில் வந்தது. இவ் வுண்மையைப் பழக்கத்தில் நாம் அறிவோம். கண் பார்க்கும்; அது பகர்ப் பதைக் காது பார்க்காது. காது கேட்கும்; மூக்கு முதலிய மற்றப் பொறிகள் கேட்கமாட்டா. இங்ஙனம் ஒரு பொறி அறிவதை மற்றொரு பொறி அறிவதில்லை, பொழிப்புரையில் 'ஒன்று' என்று வந்தது, 'ஒரு பொறி' என்னும் பொருட்டு.

இரண்டு கருத்துக்களை இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம். ஒன்று வேலை செய்யும்போது மற்றொன்றும் வேலை செய்வதில்லை; காலத்தால் இப்படி வேறுபடும் நிலையில் ஐம்பொறிகள் உள்ளதோடு, செயலாலும், ஒன்று செய்வதை மற்றொன்று செய்வதில்லை என்று தெரிந்து கொள்ளலாம். காலம் வேறுபடுவது ஒன்று. செயல் வேறுபடுவது இன்னொன்று.

ஐம்பொறிகளும் இரண்டு வேறுபாடுகளுடன் அறியுந் திறன் உள்ளனவாயினும், தாமே அறியும் திறன் அவற்றிற்கு இல்லை. ஐம்பொறிகளையும் அறிதலிற் செலுத்த உயிரறிவு தேவையாயிருக்கிறது. உயிரறிவும் சேர்ந்தால்மட்டும் பொறிகள் அறிகின்றன. காரணம், பொறிகள் அறியாமைப் பொருள்கள்; உயிர் அறிவுப் பொருள்.

ஐம்புலன்களையும் தனித்தனி அறிவதோடு, விரும்பிய நேரத்தில் விரும்பியபடி அறியவல்லது உயிர். இப்படி ஐம்புலன் களின் பயனையும் அது கொள்கிறது.

பயன்கொள்ளும் அது, ஐம்புலன்களுக்கும் வேறுதானே. ஒரே பொருளாயிருந்தால் பயன் கொள்ள முடியுமா? மல்லிகைப் பூ தானே பயன்கொள்ளுமா? அதற்கு வேறாயுள்ள மாதுதானே பயன் கொள்ள முடியும்? சந்தனத்தின் மணத்தைச் சந்தனமே அறிந்து இன்பம் நுகர முடியுமா? அதற்கு வேறாயுள்ள ஆடவன் ஒருவன் தன் உடம்பிற் பூசி மணம் அறிந்து பயன் காண முடியும்! அப்படித்தான் ஐம்புலன்களின் பயனை அவற்றிற்கு வேறாயுள்ள பொருள் அறிந்துகொள்கிறது; அப் பொருளைத் தான் 'உயிர்' என்கிறோம்.

எடுத்துக் காட்டு வெண்பா,

"ஒன்றறிந்த தொன்றறியா தாகி, உடல் மன்னி
அன்றும் புலனும்அவ் அஞ்செழுத்தை—ஒன்றறிதல்
உள்ளதே யாகில் அது நீ, தனித்தனி கண்டு
உள்ளல்அவை ஒன்றல்ல; ஓர்"

என்பது.

பொருள் :

உடன் மன்னி - உடலைப் பொருந்தி; ஒன்று அறிந்தது ஒன்று அறியாதாகி - ஒரு பொறி அறிந்த புலனை வேறு ஒரு பொறி அறியாததாகி; அன்றும் புலனாய் - இவ்வாறு மாறுபடும் புலன்களாக உள்ள; அஞ்செழுத்தை - அந்த ஐந்து எழுத்தால் அறிதல் ஐந்தையும் (ஐந்து புலன்களின் பயனையும்); ஒன்று அறிதல் உள்ளதேயாகில் - வேறொரு பொருள் அறிந்து கொள்ளுதல் இருக்குமானால்; அது நீ - அதுதான் உயிரென்னும் நீ; தனித்தனி கண்டு உள்ளல் - ஐந்து புலன்களையும் தனித்தனியே கண்டறிபவையாதலால்; அவை ஒன்றல்லை - அத்தகைய பொறிகளுள் ஒன்ருக எல்லாவற்றையும் சேர்த்தறியும் அறிவுடைய நீ ஆகாய்; ஓர் - ஆய்ந்துதெளிந்து கொள்க.

பொழிப்புரையில் 'அறியாமையின்' என்று வந்தது, மற்றப் பொறிகளின் தொழில்களை அறியாமையால் என்பது; அதோடு, ஐம்பொறிகளும் இவ்வாற்ருல் அறியாப் பொருள்களே என்பதும் அறியப்படும் எல்லாப் பொறிகளின் தொழில்களையும் அறிவது ஒன்று உண்டு. அதுவே ஆன்மாவாம் என்று வந்தது. ஆதலால்; ஆன்மா ஓர் அறிவுப் பொருள் என்பதுந் தெரிகின்றது. எடுத்துக்காட்டுச் செய்யுளில் பொழிப்புரையின் கருத்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது. பொறிகளின் தொழில், புலன்களாய் அறிதல்.

ஐம்பொறிகளும் தம்முள் வேறுபட்ட தொழில்கள் உடையன. ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு செயலே அமைந்திருக்கிறது. ஒரு பொறி அறிந்ததை ஒரு பொறி ஏன் அறியவில்லை? காரணம், ஒவ்வொன்றும் ஒவ்வொரு செயல் உடையதாய் இருந்தால் அவை நன்கு நிகழும். 'அன்றும் புலன்' என்பது இதை விளக்கிற்று. அன்றும் - மாறுபடும். மாறுபாடு இங்கு வேறுபாடு எனப்பட்டது. ஏனென்ருல் அவை ஒன்றுக்கொன்று பகை அன்று.

'உடல் மன்னி' என்றதனுல் ஓர் உண்மை விளங்குகிறது. ஓர் உடம்பிலேயே ஐந்து புலன்களும் உள்ளன. எல்லாம் தசையாய் இருந்தாலும், ஒவ்வொன்றும் வேறு வேருக அறிதல் உடையதாயிருக்கிறது.

முன் பிரிவில், உயிரென்பது உடலுக்கு வேறு எனப்பட்டது. அவ்வுயிரறிவுதான் இந்த உடலிற் பொருந்தி அறிகிறது என்பதை இப் பிரிவில் தெளிந்துகொள்ளுகிருேம்.

'அஞ்செழுத்து' என்பது ஆன்மாவை உணர்த்தும். ஐம்பொறிகளையும் இயக்கி அறிதலால் ஆன்மா ஆகுபெயராயிற்று.

மீண்டும் அச் சொல், அப் பொறிகளின் தொழிற்பாடாகிய புலன்களுக்கு ஆகி வந்ததனால் 'இருமடி ஆகுபெயர்' ஆயிற்று. 'பொறிகள்' 'நுண்ணுடம்பு' முதலியனவெல்லாம் உடலின் பிரிவுகள்; உடல் வேறு உயிர் வேறு என்பது முன் பிரிவில் வந்ததனால், ஐம்புலன்களுக்கும் ஆன்மா வேறு என்பது தானே பெறப்படும். ஐம்பொறிகளும் அறிதலுடைமையால் அவைதாம் உயிரோ என்னும் ஐயம் சிலர்க்கு வந்தது; அன்று என்று மறுப்பதற்காக இப் பிரிவை ஆசிரியர் கூறினார்.

'ஐம்புலனையும் ஒரு பொருளே அறியும் என்பது ஏன்? ஐம் புலனையும் ஐந்து உயிர்கள் என்றால் என்ன?' என்றுங் கேட்கத் தோன்றும். ஐம்புலன்களையும் ஐந்து உயிர் என்று கொண்டால், அவை ஒரு நேரத்தில் இல்லாவிட்டாலும் ஒரு நேரத்தில் மற்ற தன் நலத்தை நுகர வேண்டும்; அப்படி வாழ்க்கையில் இல்லையே! ஆதலால், ஐந்து பொறிகளும் ஐவகை உயிராதல் செல்லாது. 'ஐந்தும் ஓர் உடம்பில் நிலைபெறுவதனால் அவ் வொற்றுமை பற்றி ஓர் உயிர் எனப்பட்டது' என்பதும் பொருந்தாது; புலன்களோ ஒன்றுக்கொன்று வேறுபட்டவை; அவ் வேறுபாடு அவற்றின் ஒற்றுமையை எப்படிக் காட்டும்!

ஐந்தின் தொழிற்பாட்டையும் வேறு ஒன்று அறிதல் உள்ளதேயானால், அது நீ என்பது கருத்து. அதற்குக் காரணமே, 'பொறிகள் ஒன்று அறிந்ததை ஒன்று அறியா' என்பது; அவை அறியாப் பொருள்கள் என்னும் விளக்கமும் 'அறிதல் (வேறு) ஒன்று உள்ளதே யாகில்' என்னும் தொடரால் கிடைத்தது. அறிதலை உயிர் உடையது என்றமையால், 'ஐம் பொறிகளும் தாமே அறியமாட்டா; உயிரின் சேர்க்கையால் அறிகின்றன' என்பது பெறப்படும். அது நீ என்று வந்தமை யால், அல்லை என்று முன்னிலையாகவே கூறினார். 'ஓர்' என் பதும் முன்னிலை ஏவல் வினையாகும். ஐந்தெழுத்து எனப்படும் உயிரினால் ஐம்பொறிகளும் செலுத்தப்பட்டு, அறிதலாகிய தொழிற்பாட்டை (புலன்களை) உடைமையால், அத் தொழிற் பாடும் 'அஞ்செழுத்து' எனப்பட்டது. 'புலனாய அஞ்செழுத்து' என்று பிரித்தலே பொருந்தும்; புலனாய என்பது, 'பொறிகளின் தொழிற்பாட்டாகிய புலன்கள்' என்னும் பொருட்டு; 'ஒன்று அறிதல்' என்பது, அஞ்செழுத்தாகிய அத் தொழிற்பாட்டை வேறொன்றாகிய உயிர் அறிதல் என்று பொருளாதலின், இங்கே உயிர் வேறு அஞ்செழுத்து வேறு என்க; ஆதலின், சுட்டு வேண்டுவதில்லை.

இவ் வெண்பாவும் உவமையில்லாதது; மூன்றும் பிரிவின் கருத்தை ஐயந் தீர விளக்குவது. (தொடரும்)

உயிர்மெய்ம்முதல் வேர்ச்சொற்கள்.

[ஞா. தேவநேயன்]

வீள்[3] பிளவுக் கருத்து வேர்ச்சொல் (தொடர்ச்சி)

விடுதல்=27. இடுதல். பாலிற் கொஞ்சம் தண்ணீர் விட்டுக் கொடுத்தான். 28. கொடுத்தல். விடுதீட்டு=தானப் பட்டயம்.

விடு—விடுத்தம்=தடவை. "எங்களுரையும் இரண்டு விடுத்தமாக அழித்து ஆளும்படி வெட்டி" (புதுக். கல். 799).

விடுத்து விடுத்து=அடிக்கடி (W.).

விடு—விடுதி=தங்குமிடம். "விடுதியே நடக்கவென்று நவிலுவீர்" (பாரத. சூது. 165). 2. விடுநிலம். பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விடப்பட்ட நிலம். 3. தனித்த—வன்—வள்—து. விடுதியாள், விடுதிமாடு, விடுதிப்பூ. 4. உத்தரவு. எனக்கு விடுதி தரவேண்டும்.

ம. விடுதி, தெ. விட்டி (viddi), க. பிடதி (b).

விடு—விடுப்பு=1. நீக்கம். "விடுப்பில் குணகுணி" (வேதா. சூ. 127). 2. துருவியறியுந் தன்மை (W.). 3. வேடிக்கையானது. (W.). அவன் விடுப்புக் காட்டுகிறான். (W.). 4. விருப்பம். (யாழ். அக.). 5. விடுமுறை.

விடு—விடை=1. விடுத்தல், அனுப்புதல். 2. வெளிப்படுத்துதல். 3. வேறு படுத்துதல். "விடைப் பருந்தானை வேந்தன்" (சீவக. 555). 4. துமுக்கிக் குண்டு (தோட்டா) (புதுவை). 5. மறுமொழி, உத்தரம். 6. இசைவு, இசைமதி (அனுமதி). "கானமின்றே போகின்றேன் விடையுங் கொண்டேன்" (கம்பரா. கைகேசி. 110).

விடையிலதிகாரி=அரசன் கட்டளையை உரியவர்க்கு விடுக்கும் அதிகாரி. "விடையிலதிகாரிகள் உய்யக் கொண்டானும்" (S.I.I. iii, 36).

விடு—வீடு=1. விடுகை. "நட்டபின் வீடில்லை" (குறள், 791). 2. விடுதலை "நெடுங்கை விலங்கின் வீடுபெறல் யாதென" (பெருங். நரவாண. 3 : 107). 3. வினைநீக்கம். "வீடெனப் படும் வினைவிடுதல்" (சீவக. 2846). 4. வீடுபேறு, வீட்டுலகம். "வீடுடை யானிடை" (திவ். திருவாய். 1 : 2 : 1). 5. முடிவு. (பிங்.). 6. அழிவு. "நுகர்ச்சி யுறுமோ மூவுலகின் வீடுபேறு" (திவ். திருவாய். 8 : 10 : 6). 7. தங்கும் இடம், மனை. "வீடறக்

"கவர்ந்த" (பு. வெ. 3 : 15, கொளு). 8. ஒரையிடம். 9. சூத ரங்கிற் காயிருக்குமிடம்.

பிதிர் விள்ளை அல்லது மறை வெளிப்படுகை

விடு—விடுக்கை, விடுப்பு=விடுகதை யழிப்பு. விடுகதை= விடுக்குங் கதை.

விடு—விடுவி. விடுவித்தல்=விடுகதை யழித்தல்.

விள்—விடு—விடுச்சி—விடிச்சி — விரிச்சி = தெய்வக்குறி (oracle). "படையியங்கரவம் பாக்கத்து விரிச்சி" (தொல். புறத். 3). 2. வாய்ப்புள், தன்னேர்ச்சியான நற்சொல்.

விரிச்சி நிற்றல் = நற்சொல் கேட்க விரும்பி நிற்றல். "பெரு முது பெண்டிர் விரிச்சி நிற்ப" (முல்லைப். 11).

விரிச்சியோர்த்தல் = நற்சொல் கேட்டு நிற்றல். "நெள்ளி ரெறிந்து விரிச்சி யோர்க்கும்" (புறநா. 280).

விரிச்சி — விரிச்சிகன் = குறிகூறுவோன். "விசும்பிவர் கடவுளொப்பான் விரிச்சிக னறிந்து கூற" (சீவக. 621.)

போருக்குச் செல்லுமுன் தெய்வக் குறி கேட்பது பண்டைப் படைமறவர் வழக்கம்.

விரிச்சி என்னும் தென் சொல்லிற்கும் வினாவைக் குறிக்கும் 'ப்ரச்' என்னும் வடசொல்லிற்கும், யாதொரு தொடர்புமில்லை. தெய்வக்குறி அல்லது வாய்ப்புள், மறைவெளிப்பாடாதலால் விரிச்சியெனப்பட்டது.

வெடித்தல்

விள்—விடு—வெடி, வெடித்தல்=1. பிளத்தல், நிலம் வெடித்திருக்கிறது. "வெடிக்கின்ற வியப்பியுணித்திலம்" (தஞ்சைவா. 232.) 2. ஓசையெழப் பிளத்தல். 3. அதிர் வேட்டு முதலியன எழுதல். 4. வெடியோசை யுண்டாதல். "இவடித்த வேலை" (கம்பரா. இலங்கையெரி. 10.) 5. காய் பிளந்து பஞ்சு அல்லது கொட்டை வெளிப்படுதல். பருத்தி நன்றாய் வெடித்திருக்கிறது, ஆமணக்க முத்தெல்லாம் வெடித்துவிட்டன. 6. மலர்தல், "வெடித்தபோதெல்லாம்... கொய்தான்" (செவ்வந்திப்பு. உறையூரழி. 47.) 7. வெளிக் கிளம்புதல். இந்தச் செடியில் மூன்றிலை வெடித்திருக்கின்றன. 8. விரைத்து மேலே கிளம்புதல். "வெடித்தவாற் சிறுகன்று" (அரிச். பு. விவாக. 267.) 9. பொறுமையால் துடித்தல். (ஐந். ஐம். 36).

வெடி =1. பிளவு. "வெடியோடும் வெங்கானம்" 2. வேட்டு. 3. இடி. (சூடா.) 4. வெடிவாணம். 5. துமுக்கி (துப்பாக்கி). 6. பேரோசை. "மடிவிடு வீளையர் வெடிபடுத் தெதிர" (குறிஞ்சிப். 161) 7. பகை கிளர்கை. "வெடிபடு போர்த்தொழில் காண்" (சீவக. 776.) 8. கேடு. "வெடி படக் கடந்து" (மதுரைக். 233.) 6. அச்சம். (பிங்.) 7. வெடியுப்பு. (சங். அக). 8. நிமிர்ந்தெழுகை. "வெடிவேய் கொள்வதுபோல" (புறநா. 302). 9. தாவுகை, குதிக்கை. "வெடிபோன பருவ வாளை" (அரிச். பு., விவாக. 218.) 10. திடுமென்றெழும் புகை அல்லது மணம். 11. தீய நாற்றம். "வெடிதரு தலையினர்" (தேவா. 912 : 6.) 12. திடும் பொய். (நாஞ்.)

விள் — வெள்—வேள் — வேட்டு = வெடி. "தப்பட்டை யொலிவல் வேட்டு" (அறப். சத. 63.)

வெள்—வெளி—வெளிச்சி = காதிற்குள் வெடிக்குங்கட்டி. வெளிச்சி—விழிச்சி. (M. L.)

வெடி—வெடில் =1. வேட்டு. 2. தீயநாற்றம். வெடி லுப்பு = வெடியுப்பு.

வெட்டுதல்

விள்—வெள்—வெட்டு. வெட்டுதல்—ஓசைபட ஒரே அறையில் வாளால் அல்லது கத்தியாற் பிளத்தல். "அரிய யன்றலை வெட்டி வட்டாடினூர்" (369 : 2). 2. எழுத்து, சின்னம் முதலியன பொறித்தல். கல் வெட்டு, கலத்திற் பெயர்வெட்டவேண்டும். 3. தோண்டுதல். "கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது." (பழ.) 4. துணி முதலியன துண்டித்தல். தையற்காரன் துணியை வெட்டித் தைப்பான். 5. தலைமயிரைக் கத்தரித்தல். முடிவெட்டகம். 6. கூல அளவில் தலைவழித்தல். தலைவெட்டி அள. 7. புழுவரித்தல். "இருப்பது இருமயிர்; அதில் ஒன்று புழுவெட்டு." (பழ.) 8. சூதாட்டத்தில் எதிரியை வென்று ஆட்டக்காயை அல்லது சீட்டை நீக்குதல். வெட் டாட்டம் ஆடவேண்டும். 9. மறுத்துரைத்தல். ஒட்டிப் பேச வேண்டுமா, வெட்டிப்பேச வேண்டுமா? 10. கடுமையாகப் பேசுதல். "வெட்டிய மொழியினன்" (கம்பரா. குகப். 9.) 11. உறுப்பை நீக்குதல். தலைவெட்டிக் கருவாடு. 12. அழித்தல்.

வெட்டுவான் = பாக்கு வெட்டி.

வெட்டு—வெட்டி = வெட்டுபவன்—பவள்—வது. காடு வெட்டி, விறகு வெட்டி, மண் வெட்டி.

வெட்டறுவாள் = வெட்டுக் கத்தி.

வெட்டுக்கிளி = செடி கொடிகளின் இலை காய்களை வெட்டும் பெரு விட்டி. வெட்டி—விட்டி = சிறுவிட்டி.

விட்டி—விட்டில் = மிகச் சிறுவிட்டி. 'இல்' ஒரு சிறுமைப் பொருட் பின்னொட்டு.

விட்டி—விட்டிகை = "தீப்பட்ட வீட்டிகை போல்." (திருவிசைப்.)

வெட்டெனல் = கடுமையாதல். "வெட்டெனப் பேசேல்" "வெட்டெனவு மெத்தெனவை வெல்லாவாம்" (மூதுரை. 33).

வெளியாதல்

ஒரு பொருள் பிளந்தவுடன் இடையில் வெளியுண்டாகின்றது.

விள்—வெள்—வெளி = திறந்த இடம், புறம், விசும்பு, வானம்.

வெளித்தல் = 1. மறை வெளிப்படுதல், குட்டு வெளியாதல். 2. எல்லாரும் பார்க்கும்படி வெளிப்படையாதல். "வெளித்து வைகுவ தரிதென வவருரு மேவி ஒளித்து வாழ்கின்ற தருமமன்னன் (கம்பரா. ஊர்தேடு. 136). 3. வெறிதாதல் (யாழ். அக). 4. பயனிலதாதல் (இலக். அக).

இடை வெளி = இரு சொல்லிற்கு அல்லது பொருளிற்கு இடைப்பட்ட வெற்றிடம்.

சென்டு வெளி = போர்க் குதிரைகளைப் பயிற்றும் வட்ட வெளி.

திறந்த வெளி = கட்டிட மில்லாத இடம்.

பரந்த வெளி = இடமகன்ற வெளி.

பரவெளி = பேருலக வெளி, பரமன் உறையும் நுண்ணியல் வெளி.

புல்வெளி = புல் நிறைந்த வெளி நிலம்.

மந்தை வெளி = கால்நடை அமரும் வெற்றிடம்.

வானவெளி = விசும்பு, திறந்த வெளியாயிருக்கும் வீட்டின் உள் முற்றம்.

வெட்ட வெளி = பார்க்குமிட மெங்கும் திறந்த வெளியாயிருக்கும் இடம். "வெட்ட வெளியாக விளங்கும் பராபரமே" (தாயு. பராபர. 362).

வெள்—வெட்ட = வெளியான. ஒ. நோ: நள்—நட்ட (நட்புச் செய்த).

வெளியாதல் = வெளிப்படுதல். "வெளிநின்ற மாற்றம் வெளியானபின்" (பாரத. வெளிப்பாட்டு. 17).

வெளிவருதல் = அச்சிட்ட செய்தி பலருக்குங் கிடைத்தல்.

வெளிப்படு—வெளிப்படை. "வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா" (தொல். உரி. 2).

வெளி—வெளிவு = வெளிப்படை.

வெளிப்படு — வெளிப்பாடு = வெளிப்படுகை. வெளிப்பாட்டுச் சருக்கம் (பாரத.).

வெளியிடுதல் = நூலை அச்சிட்டு வழங்குதல்.

வெளியிடு—வெளியீடு = வெளியிடப்பட்ட சுவடி அல்லது நூல். இற்றைத் தமிழ் நூல்களுட் பெரும்பாலன சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு.

வெளிவிடுதல் = வாய்விட்டுச் சொல்லுதல்.

வெளி வாங்குதல் = மழைபெய்து அல்லது முகில் கலைந்து வானந் திறத்தல்.

வெளி—வெளிப்பு = 1. வெளிப்புறம். 2. வெளியிடம்.

வெளியேறுதல் = 1. வீட்டுக்காரன் சொற்படி வீட்டை விட்டு வேறு வீடு செல்லுதல். 2. வெளியூருக்குக் குடிபோதல்.

வெளிக்குப் பேசுதல் = 1. தனக்குத் திறமையிருப்பது போல் பகட்டாகப் பேசுதல். 2. பகையை மறைத்து நல்லவர் போற் பேசுதல்.

வெளிக்குப்போதல் = மலங்கழிதல், மலங்கழிக்கச் செல்லுதல்.

வெளிக்கிருத்தல் = மலங்கழித்தல்.

வெளிக்கு வருதல் = மலங்கழிவுணர்ச்சி யுண்டாதல்.

புறம்பு (வெளிப்புறம்):

வெளியென்பது உள் என்பதற்கு எதிர். ஒரு பொருளிற் பிளவுண்டானபின், அப் பிளவிடம் அப் பொருட்கு உள்ளாகாது வெளியா யிருத்தல் காண்க. ஒரு பொருட்குப் புறம்பானது அதற்கு அயலாதலால், பிறிதின் கிழமைப் புறம்புக் கருத்தில் அயன்மைக் கருத்துத் தோன்றும்.

ஒரு வீட்டின் உள் வாசலும் வெளி வாசலும் போல அகம் புறம் (உள் வெளி) இரண்டும் தற்கிழமையாயிருப்பின், புறம்புக் கருத்தில் வேற்றுமைக் கருத்தன்றி அயன்மைக் கருத்துத் தோன்றாது; உள்ளூர் வெளியூர் என்பனபோல இருவேறு பொருளாயின், தோன்றும்.

எ - டு: உள்நாடு × வெளிநாடு, உள்ளுலகம் × வெளியுலகம், உள்ளாள் × வெளியாள்.

இனி, எல்லாப் பொருள்களும் உள்ளும் புறம்பும் ஒத்திராமையால், புறம்புக் கருத்தில் ஏமாற்று அல்லது மாயக் கருத்துந் தோன்றும்.

வெளித் தோற்றம் = 1. புறத்தோற்றம். 2. வெளிப்பகட்டு; உள் தோற்றத்திற்கு மாறானது.

உருவெளித் தோற்றம் = மாயவுருவம், பொய்க்காட்சி.

வெறுமை:

வெளி அல்லது திறந்த வெளி என்பது ஒன்றுமில்லாத வெற்றிடத்தையுங் குறிக்குமாதலால், வெளிமைக் கருத்தில் வெறுமை அல்லது உள்ளீடின்மைக் கருத்துந் தோன்றும்.

வெள்ளிடை = ஒன்றுமில்லாத திறந்த வெளி. வெள்ளிடைமலை = திறந்த வெளியிலுள்ள மலைபோல மிக விளக்கமாய்த் தோன்றும் உண்மை.

வெள்ளிலை = பூ காய் கனியில்லாத வெறுங் கொடியின் இலை.

வெள்ளிலை—வெற்றிலை.

வெள்ளுழவு = ஒன்றும் விதைக்காது வெறுமையாக உழும் உழவு.

வெள்ளோட்டம் = விழாவல்லாத ஒத்திகைத் தேரோட்டம்.

வெள்—வேள்—வேளம்—வேழம் = காய்களை உள்ளீடில்லாதவாறு செய்யும் ஒருவகை நோய் அல்லது பூச்சி.

வேழமுண்ட விளங்கனி = வேழ (வெறுமை) நோய்ப்பட்ட விளங்கனி. நோய்ப்பட்டவனை நோயுண்டவன் என்னும் வழக்குப்பற்றி, வேழமுண்ட விளங்கனியென விளம்பழத் தோட்டைச் சிதைக்காமல் அதன் உள்ளீட்டை மட்டும் யானை யுண்ணும் என்பது, அறியாதார் கூற்று. அஃது உத்திக்குப் பொருந்துவதுமன்று. முதற்காலத்தில் வெள்ளையானையை

மட்டும் குறித்த வேழம் என்னும் சொல்லை யானைப் பொதுப் பெயராகக் கொண்டதோடு, அதனை விளங்கனி நோயைக் குறிக்கும் வேழம் என்னுஞ் சொல்லொடு மயக்கினதினால் விளைந்த விளைவு அது. வெண்ணிலம் = வெறுநிலம். வெண்பு = வெறுநிலம். வெண்கடன், வெண்ணிலை (வெள் + நிலை)க் கடன் = எழுத்துச்சான்றின்றிக் கைமாற்றாகக் கொடுக்குங் கடன்.

வெண்ணோவு = பிள்ளைப்பேற்றிற்கு முன்னுண்டாகும் வெறு நோவு.

வெண்பாட்டம் = முன்பணமின்றி விடுங் குத்தகை.

வெள்—வெறு. வெறுங்கழுத்து, வெறுங்காது, வெறுங் காவல், வெறுங்கை, வெறுஞ்சோறு, வெறுந்தலை, வெறுநாள், வெறு நெற்றி, வெறும் பந்தயம், வெறும்புறம், வெறும் பானை, வெறும் பெரியவன், வெறும் பேச்சு, வெறும்பை, வெறும் பொய், வெறு வயிறு, வெறுவாய் முதலிய சொற்கள் பல்வேறு வகைப்பட்ட வெறுமையை யுணர்த்துவன.

வெறுமொன்று = தனியொன்று.

வெறிது = ஒன்றுமின்மை.

வெறு—வெற்று. வெற்றுள், வெற்றுரை, வெற்றுறை, வெற்றோலை, வெற்றுக்கட்டை, வெற்றுத்தாள், வெற்று வண்டி, வெற்றுவேட்டு என்பன, வெவ்வேறு வகையில் வெறுமையை அல்லது உள்ளீடின்மையை உணர்த்தும்.

வெற்றெனல் = வெறுமையாதற் குறிப்பு.

வேற்றெனத் தொடுத்தல் = சிறந்த பொருளின்றி வெறுஞ் சொற்களை நிறைத்துச் செய்யுளியற்றுதல்.

வெறு—வெறி. வெறித்தல் = 1. ஆட்களின்றி வெறுமையாதல். அரசனில்லாத அரண்மனை வெறித்துப் போயிற்று. 2. மழைநின்று வானம் வெறுமையாதல். மழைநின்று வெறித்து விட்டது.

வெறிது—வெறிசு—வெறிச்சு.

வெறிச்செனல் = ஆட்களின்றி வெறுமையாயிருத்தற் குறிப்பு. திருவிழா முடிந்தபின் ஊரே வெறிச்சென்றிருக்கிறது. "வெறிச்சான திருமாளிகை" (குருபரம். 536.)

வெறு—வறு. வறுநகை, வறுநிலம், வறும்புனம் என்பன வெறுமையை யுணர்த்துவன.

வறுமை

பொருளில்லா வெறுமையே வறுமை. வெள்—வெண்கு—வெங்கு—வெங்கம்=மிக்க வறுமை. வெங்கம் பரந்த அம்மையார்க்கு விளக்கெண்ணெய் அமுதுபடி.

வெங்கம்—வெங்கன் = வறியவன்.

வெறுங்கை=வறுமை. "வெறுங்கையா ரென்னும் பேரின் மென்மையை வன்மை செய்யும்" (சேதுபு. இலக்குமி. 31.)

வெறுமை=வறுமை. "வெறுமை யிடத்தும் விழுப்பிணிப் போழ்தும் மறுமை மனத்தரே யாகி" (நாலடி. 329.)

வெறும்பயல்=ஒன்றுமில்லாதவன், வறியன்.

வெறு—வறு—வறுமை.

வறு—வறியன்—வறிஞன்.

பயனின்மை

வெறுமையும் வறுமையும் பயன் படாமைக் கேதுவாம்.

விள்—வீள்—1. வீண்=பயனின்மை, (சூடா.) 2. பயனற்றது. 3. தேவை யல்லாதது. "வீண் பேசி மடவார்கை வெள் வினைகள் கொண்டால்" (தேவா. 677 : 3.)

வீண்—வீணன் = 1. பயனற்றவன். "வீணர்க்குள் வீணன்" (அரிச். பு. சூழ்வினை. 19.) 2. சோம்பேறி. (W) 3. தீயவன் (இ. வ.)

வீண்—வீண்பு—வீம்பு=1. வீண் புகழ்ச்சி. "வீம்பு நாரியர்" (திருப்பு. 772) 2. செருக்கு. 3. ஒட்டாரம்.

வீம்பு—வீம்பன் =1. வீண்பெருமைக்காரன். 2. செருக்கன். 3. ஒட்டாரம் பிடித்தவன்.

விள்—விழல்=1. பயனின்மை. "அழல தோம்பு மரு மறையோர் திறம் விழல தென்று மருகர்" (தேவா. 866 : 7). 2. பயனற்ற கோரைவகை.

விழல்—விழலன் —ஒன்றுக்கும் உதவாதவன். "விழல னேனையாள நினைவாய்" (திருவேங். சத. 86).

விழலன்—விழலி=ஒன்றுக்கும் உதவாதவள். "வீணிகள் விழலிகள்" (திருப்பு. 890).

விழல்—விழலாண்டி = சோம்பித்திரியும் வீணன். (W.).

விழலுக்கிறைத்தல் = வீண் பாடுபடுதல்.

வின்—வெள்—வெட்டி = பயனின்மை. "என்னை வெட்டிக்குப் பெற்று வேலிக்காலிற் போட்டிருக்கிறதா?"

ம. வெட்டி, தெ. வட்டி, ப.க. பிட்டி (b).

வெட்டிப்பயல் = பயனற்றவன் (W)., வேலை செய்யாதிருப்பவன்.

வெட்டி வேலை = பயனற்ற வேலை, சம்பளமில்லா வேலை.

வெறும்பிலுக்கு = வீண்பகட்டு. வெறும் பிலுக்கு வண்ணான் மாற்று.

வெறுமன் = வீண். "அப்பச்சை வெறுமனாகாமே" (ஈடு, 4 : 10 : 7).

வெறுமனே = 1. வீணாக. 2. வேலையின்றி. "வெறுமனே தானத்திற்கு இசைவிடும் எழிற்கையினை" (பதிற்றுப். 61. உரை).

வெறு—வெறிது = பயனின்மை. "வெறிது நின் புகழ்களை வேண்டாரி லெடுத்தேத்தும்" (கலித். 72).

வெறிது—வறிது = பயனின்மை (பிங்.).

(இக் கட்டுரை முற்றும்)

தமிழகவரசின் கடமை

மறைத்திரு மறைமலையடிகளாரால் பெரிதும் பாராட்டப்பெற்ற மொழிப் பேரறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் எழுதிவந்த "வேர்ச்சொல் கட்டுரைகள்" இவ்விதழில் வெளிவந்திருக்கும் கட்டுரையுடன் முடிவடைகின்றன. இனித் "தமிழின் தலைமையை நாட்டும் தனிச்சொற்கள்" என்னுங் கட்டுரைத் தொடர் தொடங்கும். மொழியாராய்ச்சித் துறையில் பாவாணர் அவர்களுக்கு ஒப்பாவார் எவரும் இல்லை என்பதும், அவர்கள் நூலெழுதத் தொடங்கிய காலமுதல் கழகம் அவர்களிடம் தனி மதிப்பு வைத்து அவர்கள் செய்துவரும் மொழியாராய்ச்சிக்குத் துணைநின்றுவருவதும் யாவரும் அறிவர்.

பாவாணர் அவர்கள் மேற்கொண்டிருக்கும் "செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி" சிறந்த முறையில் வெளி வருவதற்கு வேண்டிய உதவிகளைத் தமிழகவரசு செய்தல் இன்றியமையாததாகும்.

சங்க இலக்கியத்தில் ஆடை, அணிகலன்கள்

[பி. எல். சாமி, பி. எஸ்ஸி.,]

பழந்தமிழர் சங்ககாலத்திலேயே ஆடை, அணிகலன்கள் அணிந்து சிறப்புற்று வாழ்ந்தனர் என்பதற்குப் பல சான்றுகள் இருக்கின்றன. இந்தக் கட்டுரை சங்கச் சான்றுகளை மட்டும் கூறும் நோக்கமுடையதன்று. சங்க நூற்சான்றுகளை மேலை நாட்டு வரலாற்று நூற்சான்றுகளோடும் வடநூற்சான்று களோடும் ஒப்பிட்டு ஆராய முயல்வதாகும்.

சங்க காலத்தில் மிளகிற்கு அடுத்தபடியாக மேலை நாட்டிற்கு ஏற்றுமதியான சிறந்த பொருள் உயர்ந்தவகைத் துணியே என்பது பெரிப்புளூஸ் எழுதிய நூற்செய்திகளிலிருந்து தெரிகின்றது. வேறு சில மேலைநாட்டு ஆசிரியர்களும் இதைக் கூறியுள்ளனர். உறையூரிலிருந்து 'Argarcitides' என்ற விலையுயர்ந்த துகில் (Muslin) ஏற்றுமதியானதாகப் பெரிப்புளூஸ் எழுதியுள்ளார். சோழரின் தலைநகரமான உறையூர் கிரேக்க உரோமர்களால் 'Argaru' என்று அழைக்கப்பட்டது. 'Muslin' என்று மேலை நாட்டினர் குறிப்பிடும் துணி மிகச் சிறப்பாக நெய்யப்பட்ட துணியாகும். சங்ககாலத்தில் இத் துணி 'துகில்' என்றழைக்கப்பட்டது. மொகலாயர் காலத்தில் இத்தகைய துணிகள் (Dacca Muslin) எவ்வளவு நேர்த்தியாக நெய்யப்பட்டன என்பதை மேலைநாட்டு ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஒரு மோதிரத்தின் இடைவெளிக்குள் 100 முழத்துணியை நுழைக்கக்கூடிய அளவு மென்மையாகவும் நயமாகவும் இந்தத் துணி நெய்யப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. சங்ககாலத்தில் மேலை நாட்டொடு தொடங்கிய துணி வணிகம் பிற்காலத்தில் 16, 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் போர்த்துகீசியர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோருடனும் நடந்து வந்திருக்கின்றது. பிரெஞ்சுக்காரர் தமிழகத்தில் சில பகுதிகளைக் கைக்கொண்டு ஆட்சியும் மாட்சியும் பெற்றிருந்த காலத்தில் எந்த எந்த வகைத் துணிகள் மேலை நாடுகளுக்கு ஏற்றுமதியாயின என்பதை ஆனந்தரங்கப் பிள்ளையின் நாட்குறிப்பு தெளிவாகக் கூறியுள்ளது. இடைக்காலத்தில் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் தமிழ் நாட்டிலிருந்து ஏற்றுமதியான சிறந்த துணிகளுக்காகவே கும்பனிகளைத் (Company) தோற்றினர் என்று தெரிகின்றது. ஆதலின் தமிழ்நாடு ஆடை

களுக்குச் சிறப்புப்பெற்ற நாடு என்பது சங்க காலத்திலிருந்தே தெளிவாக விளங்குகின்றது.

சங்க காலத்திலேயே மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் என்ற புலவர் பெயர் காணப்படுகின்றது. இந்தப் புலவர் துணி வணிகம் செய்து வாழ்ந்தவர் என்பது அவர் பெயரிலிருந்து தெரிகின்றது. ஆனால், அறுவை என்ற துணி உயர்ந்த வகைத் துணியென்று தெரிகின்றது. உரையாசிரியர்கள் அறுவை என்பதற்குத் துகில் என்றே பொருள் கூறியுள்ளனர். துகில் என்ற பெயர் உயர்ந்த, சிறந்த துணியையே குறித்தது. அறுவை என்ற சொல் முதலில் அறுக்கப்பட்டது என்ற பொருளில் வெட்டப்பட்ட துணியைக் குறித்தது. துணி என்பது இக்காலத்தில் துணிக்கப்பட்ட ஆடையையே சிறப்பாகக் குறிப்பிடுவதைக் காணலாம். சங்க நூல்களில் துணிக்கப்பட்ட எல்லாப் பொருட்களையும் துணி என்ற சொல் குறித்தது. துகில் என்பதையே மேலை நாட்டினர் 'Muslin' என்ற சிறந்த துணியாகக் கூறினர். துகில் என்ற சொல் 'துய்' என்ற வேர்ச்சொல்லிலிருந்து தோன்றியது. துய், துய்யில், துகில் என்று வரும் மாற்றம் இயற்கையானதாகும். துய் என்ற சொல் மெல்லிய இழையைக் குறிக்கும். மலைபடுகடாத்தில் 'துய்ம்மயிர்' (418) என்ற வழக்கில் 'துய்' மென்மைப் பொருளில் வழங்கியுள்ளது. துகில் என்ற ஆடையைக் குறித்த சொல் வடநூலில் 'Dukila' என்று மாறியது. கி. மு. சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே துகில் என்ற தமிழ்ச் சொல் வடமொழியில் புகுந்து சிறிது ஒலிமாற்றம் அடைந்தது. வடமொழிப் பற்றுடையோர் இச் சொல் வடமொழிச் சொல் எனினும் அதற்குச் சான்றுகள் கூறமுடியவில்லை. ஆரியர் இந்தியாவில் நுழைவதற்கு முன்னரே நெய்யுந்தொழில் சிறப்புற்றிருந்ததற்கு அரப்பா நாகரிகம் சான்று பகர்கின்றது. ஆதலின் ஆரியர்க்கு முன்னரே இந்தியாவில் இருந்த திராவிடரிடமிருந்து ஆடையைப் பற்றிய சொல்லை ஆரியர் எடுத்துக் கொண்டனர் என்று கருதுவது பகுத்தறிவுக்கும் வரலாற்றுணர்வுக்கும் ஒத்ததாகும். ஆரியர் பண்டைக்காலத்தில் கம்பள ஆடைகளையும் தோலாடைகளையுமே அணிந்தனர். இந்தியாவில் நுழைந்த பிறகு பருத்தியாடைகளைப் பற்றித் தெரிந்து கொண்டனர். சங்க நூல்களில் உறையூரில் துகில் போன்ற சிறந்த ஆடைகள் நெய்யப்பட்டு ஏற்றுமதியானதைப் பற்றிக் குறிப்பு இல்லையாயினும் அதே காலத்தில் மதுரையில் அத்தகைய ஆடைகளை விற்ற புலவர் பெயர் கூறப்பட்டுள்ளது. இந்தப் புலவர் வணிகம் செய்த அறுவைகூட ஏற்றுமதிக்கான துணியாகவும்

இருந்திருக்கலாம். அதனால் சிறப்புப் பெயர் பெற்றிருக்கலாம். துகில் என்ற நயமான உயர்ந்த துணியைப் பற்றிச் சங்க நூல்கள் கூறியுள்ளன :

"அருவர் வாழி தோழி யரச
யானை கொண்ட துகிற்கொடி போல
வலந்தலை ஞெமயத்து வலந்த சிலம்பி" —அகம். 111

"இலையொழித் துலறியழி புன்றலை யுலவை
வலைவலந் தனைய வாகப் பலவுடன்
சிலம்பி சூழ்ந்த புலங்கெடு வைப்பிற்
றுகிலாய் செய்கைப் பாவிரிந் தன்ன
வெயிலவிர்பு நுடங்கும் வேல்வெங் களரி" —அகம். 293

"பசைவிரற் புலைத்தி நெடிதுபிசைந் தூட்டிய
பூந்துகி லிமைக்கும் பொலன்காழல்குல்" —அகம். 387

"முழங்குதிரை கொழீஇய மூரி யெக்கர்
நுணங்குதுகில் நுடக்கம் போலக் கணங்கொள" —நற்றிணை. 15

"துகில்விரித் தன்ன வெயிலவிர் உருப்பின்
என்றூழ் நீடிய குன்றத்துக் கவாஅன்" —நற்றிணை. 43

"நீரற வறந்த நிரம்பா நீளிடைத்
துகில் விரித்து அன்ன வெயிலவிர் உருப்பின்" —நற்றிணை. 99

"அரவுக்கிளர்ந் தன்ன விரவுறு பல்காழ்
வீடுறு நுண்துகில் ஊடுவந்து இமைக்கும்" —நற்றிணை. 366

"ஏந்தெழின் மழைக்கண் வனைந்துவர லிளமுலைப்
பூந்துகி லல்குற் றேம்பாய் கூந்தல்" —பதிற்றுப்பத்து. 54.

"அலங்குகுலை யீந்தின் சிலம்பிபொதி செங்காய்
துகில்பொதி பவள மேய்க்கும்" —ஐங்குறுநூறு. மிகை. 2

"துகில்விரி கடுப்ப நுடங்கித் தண்ணென
அகிலார் நறும்புகை யைதுசென் றடங்கிய" —புறம். 337

"துரும்புபடு சிதாஅர் நீக்கித் தன்னரைப்
புகைவிரிந் தன்ன பொங்குதுகி லுடீஇ" —புறம். 398

"துகிலணி யல்குற் றுளங்கியன் மகளி
ரகிலுண விரித்த வம்மென் கூந்தலின்" —சிறுபாணாற்றுப்படை. 262-263

"துணங்கையம் பூதந் துகிலுடுத் தவைபோற்
சிலம்பி வானூல் வலந்த மருங்கிற்" —பெரும்பாணாற்றுப்படை 235-236.

"கொன்றை மென்சினைப் பனிதவழ் பவைபோற்
பைங்கா ழல்கு னுண்டுகி லுடங்க''
—பெரும்பாணாற்றுப்படை. 328-329

''அதிரல் பூத்த வாடுகொடிப் படாஅர்
சிதர்வர லசைவளிக் கசைவந் தாங்குத்
துகின்முடித்துப் போர்த்த தூங்க லோங்குநடைப்
பெருமூ தாள ரேமஞ் சூழப்'' —முல்லைப்பாட்டு. 51-54

"ஆவுதி மண்ணி யவிர்துகின் முடித்து
மாவிசும்பு வழங்கும் பெரியோர் போல"
—மதுரைக்காஞ்சி. 494-495

"பூந்துகின் மரீஇய வேந்துகோட் டல்குல்
அம்மா சூர்ந்த வவிர் நூற் கலிங்கமொடு"
—நெடுநல்வாடை. 145-146

"புடைவீ ழந்துகி லிடவயிற் றழீஇ'' —நெடுநல்வாடை. 181

"அவிர் துகில் புரைய வவ்வெள் ளருவித்
தவிர்வில் வேட்கையேந் தண்டா தாடிப்"
—குறிஞ்சிப்பாட்டு. 55-56

"துணைப் புணர்ந்த மடமங்கையர்
பட்டு நீக்கித் துகிலுடுத்து'' —பட்டினப்பாலை. 106—107

"நாளூன்றிய கவிகிடுகின்
மேலூன்றிய துகிற் கொடியும்" —பட்டினப்பாலை. 167-168

"கோபத் தன்ன தோயாப் பூந்துகிற்
பல்காசு நிரைத்த சில்கா ழல்குற்" —முருகு. 15-16

"வேறுபஃ றுகிலி னுடங்கி யகில்சுமந்து" —முருகு. 296

"கைவளை யாழி தொய்யகம் புனைதுகில்
மேகலை காஞ்சி வாகு வலயம்'' —பரிபாடல். 7-46-47

"மதியுணர மகளென வாம்பல்வாய் மடுப்ப
தீப்பால் வெண்டுகில் போர்க்குநர் பூப்பால்
வெண்டுகில் சூழ்ப்பக் குழன்முறுக்குநர்''
—பரிபாடல். 10-78-80

"துகில்சேர் மலர்போன் மணிநீர் நிறைந்தன்று"
—பரிபாடல். 12-93

"அந்துகிற் போர்வை யணிபெறத் தைஇகம்'' —கலி. 65

"உடுத்தலை கைவிணைப் பொலிந்த காசமை பொலங்காழ்மேன்
மையில் செந்துகிர்க் கோவை யவற்றின் மேற்
தைஇய பூந்துகி லைதுகழ லொருதிரை" —கலி. 85

"வேல்லலா னுடைத்தாழ்ந்த விளங்குவெண் டுகிலேய்ப்ப
வாலிது கிளர்ந்த வெண்காற் சேயுங்." —கலி. 105

சங்க நூல்களில் பல பாடல்களில் துகில் என்ற துணி போற்றப் பட்டுக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். துகில் என்ற ஆடை பட்டினும் வேறானது. பஞ்சினால் நெய்யப்பட்டது. துய் என்ற சொல்லே பஞ்சின் இழையைக் குறிக்கும். பஞ்சில் நெய்யப் பட்ட மிக நயமான உயர்ந்த ஆடையையே துகில் என்று சங்க காலத்தில் அழைத்தனர். பிற்காலத்தில் மெல்லிய பட்டாடையும் துகில் என்றழைக்கப்பட்டது. நாலடியார் பாட்டில் (264) 'வாழ்வரே பட்டுந் துகிலு முடுத்து' என்று வரும் வரி உயர்ந் தோர் ஆடையைக் குறித்தது என்பது தெளிவாகத் தெரி கின்றது. துகிலும் பட்டும் வெவ்வேறு ஆடை என்பதும் தெளி வாகின்றது. துகிலாடை புகைபோல மென்மையானது என்று சங்க நூல்கள் கூறுகின்றன. புகை மிகவும் நுட்பமானது, மென்மையானது என்பதை ஒரு நாலடியார் பாடல் விளக்கி யுள்ளது.

''நீரினும் நுண்ணிது நெய்யென்பர் நெய்யினும்
ஆரும் அறிவர் புகைநுட்பம்'' —நாலடி. 282

நீரினும் நுண்ணியது நெய்யென்றும் அதனினும் நுண்ணியது புகையென்றும் பழந்தமிழர் கருதினர். துகில் மிக நுண்மை யான, மென்மையான ஆடை யாதலால் சங்க நூல்களில் மலை வீழருவிக்கும் அகிற்புகைக்கும் ஒப்பிடப்பட்டுள்ளது. விரிந்த துகில் போல அகிற்புகை இருந்ததாகப் புறநானூறு (337) கூறி யுள்ளது. புகை விரிந்தது போலப் பொங்கிய துகில் என்று புற நானூறு (398) கூறுவதையும் கவனிக்க வேண்டும். புகையை விட நுண்ணிய ஒரு பொருளுக்கும் துகிலை உவமித்துக் கூறியது கவனிக்கத் தக்கது.

வெயில் காயும்போது நீரில்லாத நீளிடையில் அலை அலை யாகக் காணும் வெயில் ஆவிபோலத் துகில் இருந்ததாகக் கூறியது மிக அரிய உவமையாகும். இந்த வெயில் ஆவிதான் கானல் நீர் என்ற மாயத் தோற்றத்தை உண்டுபண்ணுவது. இதை 'வெயில் அவிர் உருப்பு' என்று நற்றிணை (43, 99) கூறி யுள்ளது அரிய செய்தியாகும். இந்த வெயில் அவிர் உருப் பிற்குத் துகிலை உவமித்திருப்பது மிகப் பொருத்தமாகும்.

'வெயிலவிர்பு நுடங்குவது,' துகிலாடை செய்வதற்குப் பாவுநூல், பரப்பியதுபோல இருந்ததாக அகநானூறு (293) கூறியதையும் கவனிக்க வேண்டும். 'வெயிலவிர்பு' போலத் துகிலைச் செய்யும் நுண்மையான பாவுநூல் பரப்பப் பட்டிருந்ததாகக் கூறியது மிக அழகிய விளக்கமாகும்.

சிலந்திப் பூச்சி கூடுகட்டும் நூல் மிக நுண்மையானதாகும். இந்த நூலிலிருந்து ஆடை நெய்ய முடியாது. சிலந்தி நூல் போன்று துகில் இருந்ததாகப் பெரும்பாணாற்றுப்படை கூறியுள்ளது. சிற்றீச்ச மரத்தில் சுற்றியிருந்த சிலந்திக் கூட்டிற்குள் இருந்த சிவந்த ஈச்ச மரத்தின் செங்காய் துகிலில் பொதிந்த பவளத்தைப் போன்று இருந்ததாக ஓர் ஐங்குறு நூறு மிகைப் பாடல் (2) கூறியுள்ளது. சிலந்திக் கூட்டின் இழை போன்று அவ்வளவு மெல்லிய நூலால் துகில் நெய்யப்பட்டிருந்தது என்பது தெரிகின்றது. இங்குக் கூறப்பட்ட உவமை மிக மிகச் சிறப்பான தொன்றாகும். இயற்கையில் சிற்றீச்சம் புதர்களில் சிலந்திக் கூடுகள் மிகுதியாகக் காணப்படுவதை நானே கவனித்திருக்கின்றேன்.

சிற்றீச்ச மரத்தின் செங்காய் பவளம் போன்ற நிறமுடையதாகவே உள்ளன. நன்றாகப் பழுத்தால் கறுப்பாக மாறிவிடும். இந்த இயற்கைச் செய்தியை நன்கு கண்டு அழகிய உவமையாக் கூறிய நுண்மாண் நுழைபுலம் போற்றுதற்குரியது. அருவி நீருக்கும் குறிஞ்சிப்பாட்டில் துகில் ஒப்பிடப்பட்டுள்ளது. நீர் வீழ்ச்சியும் அதன் வெள்ளிய தூரலும் வெண்மையான துகிலுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. துகில் மிக மென்மையான துணியாதலால் அதற்கு நுடக்கம், மடிப்பு இருப்பது இயற்கையே. கடல் அலை கொழித்த, எக்கர் மணல் நுடங்கியிருப்பதுபோல 'நுணங்கு துகில்' நுடக்கமுடன் இருந்ததாக நற்றிணை (15) கூறியுள்ளது. சங்க நூல்களில் விரிந்த துகில், பரவிய துகில், பொங்கிய துகில், நுடங்கிய துகில் ஆகியவற்றிற்குப் பொருத்தமான உவமைகளைக் கூறியிருப்பதைக் காணலாம்.

(தொடரும்)

பாராட்டுக !

அறிவியலறிஞர் பி. எல். சாமி அவர்கள் சங்க இலக்கியத்தில் உள்ள அறிவியல் கருத்துகளைத் தொடர்ந்து ஆராய்ந்து எழுதி வருகின்றார்கள். பல்கலைக் கழகங்கள் இவர்களுக்குப் 'பி. எச். டி' பட்டம் வழங்கிப் பாராட்டுதல் நன்று.

மேம்படுநிலைத் தியானம்
(Transcendental Meditation)

[பேராசிரியர் க. வ. முத்தையா, எம்.ஏ.]

நாடு பழம்பெருநாடு என்று பாடினார் பாரதியார். இஃது ஆன்மீகத் துறையில் அன்றும் இன்றும் உலகுக்கு வழி காட்டியாகவும் ஒளிகாட்டியாகவும் இருக்கிறது. இருப்பினும் மனித முன்னேற்றம் இக் காலத்தில் இடருக்குள்ளாகி யிருக்கிறது. இவ் விடர்களைய முன்வந்தார் ஒரு (மகாரிஷி) மாமுனிவர். இமயத்தில் பல்லாண்டுக்காலம் தியானத்திலிருந்து வெளி வந்தார். இவ்விடர் களைய, தியானமே சிறந்தவழி என்று உலகுக்குப் பறைசாற்றுகிறார் இம் முனிவர். அதனோடமையாது உலகில் பல நாடுகளிலும் இதைச் செயல்முறைப் படுத்தியும் வருகிறார். இவர் தாம் முனிவர் மகேஷ்யோகி. ஆக்க அறிவியல் (Science of Creative Intelligence) என்னும் அறிவியலை அருளிய வரும் இவரே.

ஓரிடத்தில் ஓயாத உழைப்பையும் ஓரிடத்தில் மட்டுமீறிய மடிமையையும் காண்கிறோம். சிலர் ஓயாது உழைத்துக்கொண்டே யிருக்கின்றனர். சிலர் ஓய்வாகவே காலங் கழிக்கின்றனர். இவையிரண்டும் சரியல்ல. ஓய்வும் வேண்டும்; உழைப்பும் வேண்டும். சிலர் பெருஞ் செல்வம் ஈட்டவேண்டும் என்ற ஒரு நோக்கோடு தங்கள் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட பொறுப்புக்களை ஏற்றுக்கொள்கிறார்கள். அவற்றை நிறைவேற்ற முடியாமல் திணறுகிறார்கள். இதனால் மிகுந்த களைப்புக்கும் அழுத்தங் களுக்கும் ஆளாகின்றனர். உடலினுள்ளும் உள்ளத்தினுள்ளும் சோர்வுகளும் கோளாறுகளும் திரளுகின்றன. இவ் வழுத்தங் களைப் போக்குவதற்கு மகரிஷி அருளிய ஒரு வாய்பாடு.

"உன்வேலைப் பளுவைக் குறைத்துக்கொள் அல்லது
உன் வேலைத்திறத்தை மிகுத்துக் கொள்"

இவ் விரண்டில் ஒன்றை மனிதன் கடைப்பிடிக்க வில்லை யென்றால், உடலோ உள்ளமோ அழிவது திண்ணம்.

மிகுந்த வேலையில் ஈடுபடும் உழைப்பாளிக்கு ஆழ்ந்த ஓய்வு தேவை. அப்பொழுதுதான் உடல் உலைவுகள் நீங்கும். ஒவ் வொருநாளும் மனிதன் படும் பாட்டினால் அவன் உடலில் ஏறும் களைப்பும் சோர்வும் சிறிதில்லை. அவை சுமையாக ஏறிவிடு கின்றன. மனத்திலும் கவலைகள் சுமை சுமையாக ஏறுகின்றன.

இவற்றைப் போக்குதற்குரிய வழி ஓய்வுதான். உடல் ஓய்வு உடல் சோர்வையும் களைப்பையும் போக்கவல்லது. மன ஓய்வானது மனச் சோர்வையும் களைப்பையும் போக்கவல்லது. பொதுவாகத் தூக்கத்தின் மூலம் உடலுக்கு ஓய்வளிக்கிறோம். ஆயினும், இதனால் மனக்கவலைகள் மடிவதில்லை. உறங்கி விழித்ததும் கவலைகள் என்னும் சுமை நம்மை அழுத்துகின்றது. உறக்கத்தின் மூலம் ஓரளவு ஓய்வுதான் பெறமுடியும். இவ் வோய்வு நம் உடலில் ஆழ்ந்து படிந்துள்ள உலைவுகளாம் நச்சுத்தன்மைகளை முற்றிலும் நீக்கிவிடுவதில்லை. ஆதலால் இதைக் காட்டிலும் சிறந்ததோர் ஓய்வு நம் உடலுக்கும் உள்ளத்துக்கும் தேவை என்பது புலனாகிறது. இத்தகைய ஓய்வும் உழைப்பும் உள்ள வாழ்க்கைதான் சரியான வாழ்க்கை.

இதனைப் பெறுவதற்கு அறிவு நுட்பம் இன்றியமையாதது. நம் நுண்ணறிவு அனைத்துக்கும் வித்தாக இருப்பது எண்ணமே. எண்ணம் என்பது நம்முள் எங்கோ ஓரிடத்தில் ஆழத்தில் புதைந்து கிடக்கிறது. அதினின்றுதான் சிந்தனை எழுகிறது. மிக நுணுக்கமாகச் சிந்தனை செய்யும் பகுதிக்கும் அப்பால், எண்ணத்தின் தோற்றுவாயில், ஆக்க அறிவின் மையம் (Centre of creative Intelligence) அமைந்திருக்கிறது. இஃது ஓர் அறிவுக் களஞ்சியம்; ஆற்றலின் பெட்டகம்; எல்லையற்ற மெய்ப்பொருள். இதில்தான் எண்ணத்தின் பிறப்பிடம் உள்ளது. இதனை நோக்கி நாம் நம் மனத்தைச் செலுத்த வேண்டும். அப்பொழுதுதான் நமது நனவு மனம் அமைதியடையும்; உடல் ஓய்வு பெறும்; நம் ஆக்கத்திறமை மிகும்; நம் அறிவு நுட்பமும் அதிகரிக்கும். இந்த ஆக்க அறிவின் வற்றாத ஊற்றினை எளிதில் அடைய ஏதேனும் வழியுண்டா? உண்டெனில், அவ் வழி செல்வதற்குரிய திறமையை நாம் எப்படிப் பெறுவது? இதற்கு ஓர் உத்தி கிடைத்தால் நல்லது. அஃது ஆக்க அறிவின் போக்கையும் நமக்குக் காட்ட வேண்டும்; நம் எண்ணம், செயல் ஆகியவற்றையும் வளம்படுத்த வேண்டும்; ஓய்ந்த உடலுக்கு உயிர்ப்பளிக்க வல்லதாயும் இருத்தல் வேண்டும். புனிதர் மகரிஷி மகேஷ் யோகியின் மேம்படு நிலைத்தியானமே ஆக்க அறிவை அடைவதற்குரிய நெறியாகும். இதனால் உண்டாகும் நற்பயன்களை யெல்லாம் தற்கால அறிவியல் ஆய்வுகள் மெய்ப்பித்திருக்கின்றன. இதற்குரிய தேவையெல்லாம் காலையிலும் மாலையிலும் 20 நிமிடந்தான்.

எண்ணங்களின் மூலமுதலுக்கு ஆக்க அமைதியின் (Creative Silence) இயல்பு இருக்கிறது. நம் உணர்வை அவ்விடத்திற்குக் கொண்டு செல்லவேண்டும். இதற்கென மகரிஷி

வகுத்த நெறியைப் பின்பற்றி நாம் மூல முதலைச் சென்றடைய லாம். அதினின்று ஆக்கமும் ஊக்கமும் அளவின்றி அடைய முடியும். அப்படி அடைகின்றபொழுது பெருஞ் செல்வமும் செல்வாக்கும் நம்மை வந்தடைகின்றன. இதற்குரிய செயல் முறையே மேம்படு நிலைத்தியானம்.

இத்தியானத்தால் என்னென்ன பலன்கள் கிடைக் கின்றன? ஒரு பொருளைப் பற்றிச் சிந்திக்கும் திறம் அதிகரிக் கிறது. எதனையும் கூர்ந்து நோக்கும் நோக்கரிய நுண்ணுணர்வு கிட்டுகிறது. எப்பொருளையும் உள்ளது உள்ளபடி மதிப்பீடும் ஆற்றல் வளர்கிறது. எச்செயலையும் இருள்தீர எண்ணிச் செய்தல் எளிதாகிறது. சுருங்கச் சொன்னால், எப்பொருளினது மெய்ப்பொருளையும் நம் அறிவால் காண முடியும்.

மனிதன் தன் மனஆற்றலில் பத்தில் ஒரு பங்குகூடப் பயன்படுத்துவதில்லை. உளவியல் இவ்வாறு உரைக்கிறது. இதனால்தான் வாழ்க்கையை முழு அளவில் நம்மால் அனுப விக்க முடிவதில்லை. வேதனையைக் குறைப்பதற்கு மிக்க மன ஆற்றல் தேவை. துயரத்தைப் போக்குவதற்கு மனத்தின் முழுநிலைச் சக்தியையும் பயன்படுத்துதல் இன்றியமையாதது. மேம்படுநிலைத்தியானம் மாந்தனது மனத்தின் முழுநிலைச் சக்தியையும் இயல்பான முறையில் பெருகச் செய்கிறது. இது நம் பொறியுணர்வை நினைவின் தலைவாய்க்கே கொண்டு செல் கிறது. இதனால் எண்ணம், மிகுந்த வலிவும் பொலிவும் பெறு கிறது.

மரத்தின் வலிமைக்கு அதன் வேரின் வலிமை இன்றியமை யாதது. வேர் மிக்க வலிமையுடையதாக இருந்தால்தான், எவ்வளவு புயல் வீசினாலும் மரம் சாயாமல் நிற்கும். அதுபோல வாழ்க்கைப் புயலில் வீழ்ச்சியடையாமலிருக்க வேண்டுமெனின், நம் மனத்தை வலிமையுடையதாக ஆக்கிக்கொள்ள வேண்டும். ஆழ் மனத்தின் அடியில் மூல முதலில் எண்ணமானது மிக்க வலிமையுடையதாக இருக்கிறது. மேம்படு நிலைத்தியானத்தின் மூலமாக எண்ணத்தின் மூல முதலின்கண், அதன் மிக நுண் ணிய நிலைக்கு உணர்வு செலுத்தப்பட்டால் நமது சிந்தனை மேலும் வலிமை யடைகிறது. அதன் பயனாக நாம் செய்யும் செயலிலெல்லாம் வெற்றி கிட்டுகிறது. இதன் செய்முறையும் எளிதுதான். எனினும் இப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களிடமே இதனைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

அம்பு எய்யும் வேடன் ஒருவன் அம்பை நாணுடன் பொருத்தி, வில்லை வளைத்து இழுத்து விடுகிறான். அம்பு

குறியைப் போய்த் தாக்குவதற்கு அதைச் சற்றே பின்னுக் கிழுத்து விட்டால் போதுமானது. அப்பொழுது அதன் சக்தி அளவிறந்து பெருகுகிறது. அம்பை வில்லினின்று விடுவித்த வுடன் மிக்க விசையுடன் அது பறந்து சென்று குறியைத் தாக்கு கிறது. "குறைந்த செலவில் மிகுந்த பயன் பெறுதல்" என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்தது இச் செயல். எண் ணத்தின் தோற்றுவாய்தான் ஆக்க அறிவின் களஞ்சியமாகும். மேம்படுநிலைத் தியானம் மூலம் மனம் இதனண்டை ஈர்க்கப்படு கிறது. அப்பொழுது அதன் உள்ளார்ந்த ஆற்றல் (Potential energy) நாணில் இழுக்கப்பட்ட அம்பைப் போல் பன்மடங்கு பெருகுகிறது. இதனால் சிந்தனை வலிவும் செயல்படுதிறமும் அளவிறந்து பெருகிவிடுகின்றன. சிந்தனைத் தெளிவு உருவா கிறது. இப்படியாக ஆக்க அறிவைப் பெறமுடிகிறது. இதனால் பெறும் பலன்களை அடுத்த கட்டுரையில் காண்போம்.

உள்ளமும் உடலும்

கருத்தை முனைக்க நிறுத்தப் பழகினவர்கட்கு, அவர்தம் நினைவின் நன்மைக்கு ஏற்ப அவர்தம் உடம்பும் உடம்பினுள்ள உறுப்புகளும் சீர்திருத்தம் அடைந்து பொலிவுடன் விளங்குமாத லால், எங்கே சென்றாலும் அவர்கட்குச் சிறுஞ் சிறப்பும் உண்டாம். அவரைக் கண்டவளவே எத்தகையினரும் அவர்பால் வணக்க ஒடுக்க முடையராய் அன்புடன் ஒழுகுவர்; அவர் நினைத்தபடி யெல்லாஞ் செய்குவர். நினைவில் வல்லமை வாய்ந்தோர்க்கு அவர்தம் உடம்பும் உடம்பினுறுப்புகளும் பொலிவு பெற்றிருத்தலையும் அவர் நினைந்த படியும் சொல்லுகிறபடியும் எல்லாம் நடைபெறுதலையும் நாம் சிறிது ஆராய்ந்து பார்த்தாலும் செவ்வனே தெரிந்து கொள்ளலாம். உள்ளத்திலே மகிழ்ச்சி தோன்றுங்கால் அது தோன்றப்பெற்றவர் முகமும் உடம்பும் எவ்வளவு கிளர்ச்சியுடையவாகின்றன! அங்ஙன மல்லாமல் ஒரு கொடுந்துயரம் உண்டாகுங்கால் அவரது முகம் எவ்வளவு வாடி உடம்பு மெலிந்துபோகின்றது! இடையிடையே தோன்றும் இவ்வுள்ள நிகழ்ச்சிகளே தத்தம் இயல்புகளைத் தாஞ் சார்ந்த உடம்பினும் உடம்பினுறுப்புகளினும் பதிய வைக்கின்றன வென்றால், என்றும் நிலையாக நடைபெறும் உள்ள நிகழ்ச்சிகள் தம் பயனைத் தவறாமல் விளைக்குமென்பதை நாம் சொல்லுதலும் வேண்டுமோ!

—மறைமலையடிகளார்

(அறிதுயில்-பக் : 81.)

தவத்திரு. ஞானப்பிரகாச அடிகள் வீடுபேறு

தொண்டை மண்டல ஆதீனம் காஞ்சிபுரம் ஞானப் பிரகாசர் திருமடத்தின் தலைவர் தவத்திரு ஞானப்பிரகாச அடிகள் தம் எண்பதாவது அகவையில் 28-7-77 இல் காஞ்சி மடத்தில் இறையடியிற் கலந்தார்.

அடிகள் இம் மடத்தின் தலைவராக வருதற்குமுன் வட வார்க்காடு மாவட்டத்தில் உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரிய ராகவும் பின்னர்த் தருமபுரம் கீழ்த்திசைக் கல்லூரியின் முதல்வராகவும் பல ஆண்டுகள் பணியாற்றினார்.

ஆரணியில் தமிழறிஞராக விளங்கித் தமிழ் நூல்களைக் கற்பித்துப் பலரைத் தமிழ்ப் புலவர்களாக்கி மகிழ்ந்த, காமக்கூர் சுந்தர முதலியார் அவர்களின் மூத்த மைந்தராகிய இவர் தாமும் சைவசித்தாந்த நூல்களிலும், தமிழ் இலக்கண இலக்கியங் களிலும் வல்லுநராக விளங்கினார். வடமொழிப் புலமையும் ஓரளவு பெற்றவர். தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் பல ஊர் களில் சைவசித்தாந்த வகுப்புகளை நடத்தியும், சொற்பொழி வாற்றியும் சமயத் தொண்டு செய்தார்.

முன்னாள் கல்வியமைச்சர் திரு. தி. சு. அவினாசிலிங்கஞ் செட்டியாரவர்களின் விருப்பத்தின்படி தமிழ் வளர்ச்சி மன்றத் தின் மூன்றாவது ஆண்டு விழாவுக்குக் கழக ஆட்சியாளர் இலங்கைக்குச் சென்றிருந்தபோது, அம்மை நோய்க்கு ஆளாகி மருத்துவமனையில் இருந்தார்கள். அப்பொழுது இல்லறத் திலிருந்த திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் என்னும் இவரும் கோவை சிவக்கவி மணி சுப்பிரமணிய முதலியார் அவர் களும் மருத்துவமனைக்கு வந்து ஆட்சியாளரைக் கண்டு நலம் உசாவி, ''எப்பொழுதும் தமிழ்த் தொண்டு செய்யும் தங்களுக்கு வேண்டுமென்றே இறைவன் இப்பொழுது ஓய்வு அளித்திருக்கி றான். விரைவில் நீங்கள் நலம் பெற்று மீண்டும் தமிழ்த்தொண்டு செய்வீர்கள்'' என்று மனம் விரும்பிக்கூறி வாழ்த்தினார்கள்.

சில ஆண்டுகட்கு முன் தவத்திரு ஞானப்பிரகாச அடிகளார் வழிபாட்டு (அர்ச்சனை) மொழியாக சமற்கிருதமே இருத்தல் வேண்டும் என்றும் தமிழில் வழிபாடு செய்தல் ஆகாதென்றும் கூறியதாக ஒரு செய்தி உலவி வந்தது. ஆனால், கழக ஆட்சி யாளர் அவர்கள் அடிகளைக் கண்டு அளவளாவிய போது, தமக்கு அத்தகைய கருத்து இல்லையென்றும், யாரோ தவறாகச் செய்தி பரப்பியிருப்பதாகவும் தெரிவித்ததோடு அது பற்றித் தாம் ஓர் அறிக்கை வெளியிட்டிருப்பதாகவும் கூறினார்கள்.

தமிழ்ப் பணியும், சமயத்தொண்டும் செய்வதிலேயே வாழ் நாள் முழுதும் ஈடுபட்டிருந்த இத் தவத்திருவாளர் சிவ பெருமான் திருவடி நீழலில் இன்புற்றிருக்க இறைவனை இறைஞ்சுகின்றோம்.

கழக வரலாற்றில் சிறப்பிடம் பெறும் திருவாளர் இராம. கனகசபாபதிப் பிள்ளை

திரு. இராம. கனகசபாபதிப் பிள்ளை அவர்கள் தமது 69 ஆவது அகவையில் 25-7-77 திங்கட்கிழமை இறையடி சேர்ந்த செய்தி கேட்டு ஆற்றெணுத் துன்பம் அடைகின்றேன். அவர்களைக் கருவிலே திருவுடையார் என்று சொன்னால் மிகையாகாது. அவர்கள் பள்ளி இறுதித் தேர்வில் பெருவெற்றி பெற்றுப் பரிசு பெற்றுள்ளனர்.

திருநெல்வேலி இந்துக் கலா சாலையில் பயின்ற காலத்தில் சாரணர் இயக்கத்தில் கலந்து கொண்டு ஆற்றிய தொண்டினால் பெருமக்கள் சிலரின் நட்புக்குரியவர் ஆனார்.

இவர் தட்டெழுத்துப் பயிற்சி பெற்று 1929 முதல் இரண்டு ஆண்டுகள் குலசை, பாரி கம்பெனியில் எழுத்தராகப் பணி புரிந்தனர். பின்னர் 1931 இல் ம. தி. தா. இந்துக் கல்லூரியில் சேர்ந்து இடைநிலை வகுப்பில் படிக்கும் பொழுது செல்வர்க்கும் வறியவர்க்கும் தனிக் கல்வி கற்பித்துப் பலருடைய அன்பிற்குரியவரானார். மாணவராய் இருக்கும் போதே இவர் இசைப் பயிற்சி பெற்றதோடு, நாடகத்திலும் நடிக்கலானார்.

இடைநிலை வகுப்புத் தேர்வில் வெற்றி பெற்றபின் இந்துக் கல்லூரியிலேயே இருபது ரூபாய் சம்பளத்தில் கணக்கராக அமர்த்தப்பட்டு முப்பது ஆண்டுகளுக்குப் பின் அதன் மேலாளராகப் பணி புரிந்தனர். கல்லூரியின் ஆட்சிக் குழுத்தலைவர் மேடை தளவாய் குமாரசாமி முதலியார், முதல்வர் அலெக்சாண்டர் ஞானமுத்து ஆகியோர் பாராட்டுகட்குரியவரானார்.

கல்லூரியை நெல்லைச் சந்திப்பிலிருந்து பேட்டையில் நடத்தப் புதிய கட்டடங்கள் அமைப்பதற்குத் திரு. பிள்ளை அவர்கள் பெரும்பாடு பட்டார். அப்படி உழைத்த காலத்திலும் பொழுது போக்குக்காகக் கற்ற இசையையும், நாடகத்தில் நடிப்பதையும் மறந்தாரல்லர்.

இவர்கட்கு மனத்திற் கினிய மனைவியும், செல்வத் திருமகன் திருநாவுக்கரசும், அறிவுசான்ற மருமக்கள் மூவரும் உளர். மூவரில் டாக்டர் கு. பரமசிவம் அவர்கள் கழக நூலாசிரியர்களில் ஒருவராவர்.

திரு. நா. குற்றாலலிங்கம் பிள்ளை அவர்கள் நடத்தி வந்த திருப்புகழ் இசைச் சங்கத்தில் திரு. பிள்ளை அவர்கள் ஓர் உறுப்பினராகிப் பின்பு 5-10-1943 இல் திருநெல்வேலிச் சந்திப்பிலுள்ள தருமபுர மடத்தில் அருணகிரி இசைக் கழகத்தைத் தொடக்கி அதன் அமைச்சரானார்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக அமைச்சரும், என் அருமைத் தமையனாருமான திருவரங்கனார் அவர்கள் 28-4-1944 இல் இறையடி சேரவே யான் நெல்லையிலும் சென்னையிலுமாகக் கழகப் பணியாற்ற வேண்டியவனானேன். திருநெல்வேலியில் தங்கிய காலத்தில் திரு. கனகசபாபதிப் பிள்ளை அவர்களின் பெறற்கரிய நட்புக் கிடைத்தது.

1947 இல் பேராசிரியர் கா. சுப்பிரமணியப் பிள்ளையவர்கள் நடுகல் விழா திருநெல்வேலி சந்திப்பில் சிறப்பாக நடைபெற்றது. பின்னர் 1952 முதல் 1972 வரை அருணகிரி இசைக் கழகத்தின் துணைகொண்டு பத்துப்பாட்டு மாநாடு, அரசியல் மாநாடு, வரலாற்று மாநாடு, பதினெண் கீழ்க்கணக்கு மாநாடு, இரண்டு முதல் ஆறு முடிய ஐந்து சிற்றிலக்கிய மாநாடுகள் ஆகியவை சொற்பொழிவு நூல்களை வெளியிட்டுச் சிறப்பாக நடைபெற்றன. 27-4-1952 முதல் 20-5-1952 முடிய 'சிவஞான போத வகுப்பு' சாத்தூர் திருவாளர். தூ. சு. கந்தசாமி முதலியார் அவர்கள் ஆசிரியராக அமர்ந்து சிறப்பாக நடைபெற்றது. அவ்வகுப்புக்குப் புலவர் பெருமக்கள் இருபத்தொருவர் வந்து முறையாகப் பாடங் கற்றனர். அவர்களில் குறிப்பிடத் தக்கவர் பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி, பேரூர் தவத்திரு இராமசாமி அடிகள், சிரவணபுரம் தவத்திரு சுந்தர சுவாமிகள், மதுரை. மீ. கந்தசாமிப் புலவர், புலவர் கூர்மாவதாரக்கோன் முதலியோராவர். திரு. இராம. கனகசபாபதிப் பிள்ளை அவர்களும், திரு. அ. க. நவநீதகிருட்டிணன் அவர்களும் தொண்டுள்ளத்தோடு இணைந்து செய்த உதவியினாற்றான் மேலே குறிப்பிட்ட மாநாடுகளும், சிவஞான போத வகுப்பும் மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

புலவர். அ. க. நவநீத கிருட்டிணன் அவர்கள் பிரிவு 14-4-67 இல் திடுமென ஏற்பட்டதும் திரு. கனகசபாபதிப்பிள்ளை அவர்கள் ஒன்றரை யாண்டுவரை நரம்பு நோயினால் பெரிதும் துன்புற்றுப் பின் 25-7-77 இல் பிரிவுற்றதும் பொதுவாகத் தமிழ் மக்களுக்கும், சிறப்பாகக் கழகத்திற்கும் பேரிழப்பாகும். அவர்கள் ஆருயிர் இறையடியில் இன்ப அன்புற்று அமர்க என வேண்டுவோம்.

வண்ணச்சரபம் தண்டபாணியடிகளார்

அருளிய

தனிப்பாடல்கள் சில

தனிக்குறில் வெண்பா

குமர குழக குமரி யுதவு
மமர ரெயின ரதிப—எமது
தகவு புவிய தனிலொ ளிரஎன்
அகமு ளுறுக அணி.

தனிநெடில் வெண்பா

வேலோனே வாரோவா மேலோனே வீடோ
காலோனே மாயோனே காணாதே—மாலானே
நீவாவா வாராதே ஏரீதோ ஆகாதே
பாவாதீ தாமாகோ பா.

ஒரு வெண்பாவில் பன்னிரு மாதங்கள்

ஆடிபின்னே ஆவணிபோம் அப்பாற் புரட்டாசி
தேடிப்போம் ஐப்ப சிகார்த்திகைபோம்—நாடிவரும்
மாரிகழி தைமாசி பங்கூனி சித்திரைபின்
நேரியவை காசிஆ னி.

குறள் வெண்பாவில் குகன்புகழ் கூறல்

சுடர்வேலோன் [1]வென்(று) [2]உய்வித்துத், [3]தோழமை கொண்(டு), [4]ஊர்தல்
[1]கடல், [2]மீன், [3]கரி, [4]இரதம், காண்.

பொருள்: [1]மதுரையில் உக்கிர குமார பாண்டியனாக அவதரித்த சமயம் வருணன் விட்ட கடலை வற்றச் செய்தல், [2]சரவண மடுவில் பராசரரது புதல்வர் அறுவர் சாபத்தால் பெற்ற மீன் வடிவைத் தான் குழந்தையாக வாழ்ந்தபோது மாற்றல், [3]யானைமுகக் கணபதியைத் துணைவனாக நட்புக்கொள்ளல், [4]சூர சம்மார காலத்தில் தான் ஏறிச் செல்ல இருந்ததுதேர் என நிரல் நிறைப் பொருள் கொள்க.

தொகுப்பு. தி. மு. சங்கரலிங்கம்

சிங்கப்பூரில் திருவள்ளுவர் விழா

சிங்கப்பூர் இராமகிருட்டிண மடத்துப் பள்ளிகளின் திருவள்ளுவர் விழா 25—6—77 இல், யூருகாங் சாலையிலுள்ள கலைமகள் தமிழ்ப் பள்ளியில், தமிழகம் காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரி நிறுவனரும், சிங்கப்பூரில் வாழ்ந்து வருபவருமான திரு. இராம பெரிய கருப்பன் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

சாரதாதேவி தமிழ்ப் பள்ளியின் தலைவர் திரு. பாவாடை சாமி வள்ளுவரைப் பற்றியும், இது போன்ற விழாக்களால் மாணவர் எய்தும் பலன் பற்றியும் உரையாற்றினார். திரு.இராம பெரிய கருப்பன் அவர்கள் தமது தலைமை உரையில், 'வள்ளுவர் கால நிலையினையும், தற்போது தமிழர் மொழிப்பற்று—இனப்பற்று இன்றி வாழும் அவல நிலையினையும் சுட்டிக் காட்டி, இல்லங்கள் தோறும் திருக்குறள் போற்றப்பட வேண்டும், தமிழோசை முழங்க வேண்டும் என்றும் சிங்கப்பூர் அரசாங்கம் தமிழ்மொழி உயர்வுக்கு வகை செய்து வருவதைத் தமிழர் நன்கு பயன் படுத்தி முன்னேற்ற மடைய வேண்டும் என்றும் கூறினார்.



அடுத்து, சிங்கப்பூர் தமிழர் இயக்கப் பொதுச் செயலாளர் திரு. மா. சி. வீரப்பன், உமறுப் புலவர் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த திருவாட்டி தி. முனுசாமி ஆகியோர் திருக்குறளின் மாண்பினை விளக்கிப் பேசினர்.

இராமகிருட்டிண மிஷன் தலைவர் தவத்திரு சித்தாத்மானந்த அடிகளார் திருக்குறள் போட்டியில் வெற்றி பெற்ற மாணக்கர்களுக்குப் பரிசுகளை வழங்கினார். பின்னர் மாணவ மாணவியரின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. சாரதாதேவி தமிழ்ப்பள்ளி முதல்வர் திரு. பாவாடை சாமி நன்றியுரை கூற, விழா இனிது முடிவுற்றது.

செய்திகளும் குறிப்புகளும்

சித்தமருத்துவ ஆய்வுக் கழகத் துவக்க விழா

சித்த மருத்துவம் பற்றிய இலக்கியம், வரலாறு, நோய் நீக்குமுறை ஆகியவற்றை ஆராய்ச்சி நோக்கில் திரட்டித் தமிழில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து, உலகெங்கும் பரவச் செய்யும் நோக்கத்துடன், மூலிகைமணி கண்ணப்பரின் சித்த மருத்துவ ஆய்வுக் கழகம் துவக்கப்பட்டுள்ளது. இக் கழகத்தின் துவக்க விழா 31—7—77 இல் மாவட்ட நூலகக் கட்டிடத்தில் நடைபெற்றது. பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் இக் கழகத்தினைத் துவக்கி வைத்தார்கள். முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், டாக்டர் ம. நடராசன், டாக்டர் லலிதா காமேசுவரன், டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் ஆகியோர் உரையாற்றினர்.

மறைமலையடிகள் சைவசித்தாந்த சபை—மதுரை

மதுரைப் பல்கலை நகர் மறைமலையடிகள் சைவசித்தாந்த சபையின் இரண்டாம் ஆண்டின் கருத்தரங்கும், அன்னதான விழாவும் 19—7—77 இல் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கருத்தரங்கிற்குத் திரு. சுப்பையா, எம்.ஏ., பி.எச்.டி. அவர்களும், அன்னதான விழாவிற்குப் பேராசிரியர் டாக்டர் பி. இராசய்யன் அவர்களும் தலைமை தாங்கினர். பல்வேறு தலைப்புகளில் அறிஞர் பலர் சொற்பொழிவாற்றினர்.

இலங்கைத் தேர்தல் முடிவுகள்

168 உறுப்பினர்களைக் கொண்ட ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்திற்குக் கடந்த திங்கள் இறுதியில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி 139 இடங்களைப் பெற்றுப் பெரியதொரு வெற்றியினை நிலைநாட்டி யிருக்கிறது. அதே நேரத்தில் ஆண்டகட்சியான ஸ்ரீலங்கா சுதந்தர கட்சி எட்டே இடங்களைப் பெற்று பெருந்தோல்வி கண்டுள்ளது. திருமதி சிமாவோ மட்டும் வெற்றி பெற்று அவரது கட்சி ஆட்சிப்பீடத்தினின்று இறங்க வேண்டிய நிலை ஏற்பட்டது கண்டு உலகம் வியக்கிறது. இத் தேர்தலில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி 17 இடங்களைப் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்க செய்தியாகும். திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனேயைத் தலைமை அமைச்சராகக் கொண்டு, 24 அமைச்சர்கள் பதவி ஏற்றுள்ளனர். இத் தேர்தல் மூலம் இலங்கையில் தமிழரின் எதிர்கால அரசியல் சிறப்புறும் என்று எண்ணத்தக்க சூழ்நிலை உருவாகியுள்ளது.

ஏழை மாணவர்க்குதவும் புத்தக வங்கி

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர்ப் பன்னிரண்டே மாணவர்கள் கூடி நட்புமுறையில் துவங்கிய ஒரு சிறு புத்தக வங்கி, இப்போது ஏறக்குறைய 4 நூறாயிர ரூபா மதிப்புள்ள நூல்களைக் கொண்டதொரு மிகப் பெரிய புத்தக வங்கியாகச் சென்னையிலே காட்சி அளிக்கின்றது.

வியக்கத்தக்க இந்தப் புத்தகவங்கி, கல்வியை வளர்க்கும் நோக்கத்துடன் 1964 ஆம் ஆண்டு முதல் சென்னையில் உள்ள இராஜஸ்தானி

இளைஞர் கழகத்தால் (Rajestani Youth Association) நடத்தப்பட்டு வருகின்றது. சென்னையிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் உள்ள கல்லூரிகளில் படிக்கும் ஏழை மாணவர்களுக்குக் காசில்லாமல் பாடப் புத்தகங்களை வழங்கி உதவுவதற்கென இந்தப் புத்தக வங்கி நடை பெற்று வருகின்றது.

இந்த வங்கியிலிருந்து பாடநூல்களைப் பெற்றுச் செல்லும் ஒரு மாணவன் தனது படிப்பை முடித்து, அதில் தேர்வு பெறும் வரையில் வைத்திருக்கலாம்.

இத் திட்டப்படி 1964 ஆம் ஆண்டில் 25 மாணவர்கட்கு இவ்வுதவி அளிக்கப்பட்டது. இப்போது 1000 மாணவர்க்கு உதவும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது.

தேவார ஓதுவா மூர்த்திகள் சங்கம்

சைவ அன்பர்களின் இல்லங்கள் தோறும் சமய குரவர் நால்வரின் படங்கள் இடம்பெறச் செய்ய வேண்டும் என்ற நன்னோக்கத்துடன் நால்வர் படத் திறப்பினை இல்லங்கள்தோறும் சென்று திறந்துவைக்கத் தீர்மானித்துள்ளனர். இதனை விரும்பும் அன்பர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு எழுதினால் அவர்களே வந்து அப் படத் திறப்பினைச் செய்து வைக்கத் துணை புரிவதாக இச் சங்கத் தலைவர் அறிவிக்கிறார்.

எழுதும் முகவரி: தேவாரம் நடராசன்,
தலைவர், தேவார ஓதுவா மூர்த்திகள் சங்கம்,
22, D. L. திருட்டிணப்ப நாயக்கன் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை-33.

விஜ்யன் பவானில் தமிழ்

புது தில்லியிலுள்ள விஜ்யன் பவான் என்னுமிடத்தில் பல நாடு களின் மாநாடுகள் நடைபெறுவதுண்டு. அப்போது இந்தி, ஆங்கிலம் உருசியன், ஸ்பானிஷ், ஆகிய மொழிகள் உடனுக்குடன் ஆங்கிலத்தில், மொழி பெயர்க்கும் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

புது தில்லியில் முன்பெல்லாம் நடைபெறும் முதலமைச்சர்கள் மாநாடுகளில் முதல்வர்களின் பேச்சு உடனுக்குடன் இந்தியிலும், ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்ட போதிலும், தமிழ்ப் பேச்சுக்கு அப்படிச் செய்யப்படுவதில்லை. தமிழ்ப் பேச்சாளர் ஆங்கிலத்திலும் அதனைப் படியெடுத்துக் கொடுத்தல் வேண்டும் என்ற முறை இருந்தது.

அண்மையில் நடைபெற்ற முதல்வர்கள் மாநாட்டில் தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் பேச்சு விஜ்யன் பவானில் நேரடியாக ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது என 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' செய்தி யொன்று கூறுகிறது.

"சூறுவளி நடுவே" நூல் வெளியீட்டு விழா

திரு. வை. அ. பொன்னையா அவர்களால் தமிழாக்கம் செய்யப் பெற்ற "சூறுவளி நடுவே" என்னும் நூல் வெளியீட்டு விழா 9—8—77 இல் ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றத்தில் அருட்டிரு இரா. அருளப்பா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நூலினை அருளப்பர் வெளியிட அருட்டிரு சுந்தர் கிளார்க் பெற்றுக் கொண்டார். அறிஞர் பலர் பாராட்டுரை வழங்கினர்.

மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடை

(முன் ௫௯அ ஆம் பக்கத் தொடர்ச்சி)

கழக ஆட்சியாளர் உயர்திரு. வ. சுப்பையா பிள்ளை சூலை நன்கொடை	ரூ 100	00
கழக மேலாளர் உயர்திரு. ஆ. சுப்பையா பிள்ளை சூலை நன்கொடை	5	00
திரு. புலவர் இரா. இளங்குமரன், மதுரை புதுமனை நிறைவு விழா நினைவு நன்கொடை	25	00
செல்வன் மு. செந்தில் முருகன் (மதுரைக் கிளை மேலாளர் திரு. இரா. முத்தப்பன் மகன் பிறந்தநாள் நன்கொடை)	11	00

முதுபெரும் புலவர் கு. பாலசுந்தரனார் மறைவு

சென்னை நக்கீரர் கழகத் திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியின் முன்னாள் முதல்வரும், தமிழ்ப் பேராசிரியர் கு. மதுரை முதலியார் அவர்களின் இளவலுமாகிய முதுபெரும் புலவர் பாலசுந்தர முதலியார் அவர்கள் 24—7—77 மாலை சென்னை ஏழுகிணறு தெருவில் உள்ள தம் இல்லத்தில் காலமானார். இவர் பேராசிரியர் கா. ரா. கோவிந்தராச முதலியார் அவர்களின் மாணவர். தமிழ், ஆங்கிலம், சமக்கிருதம் ஆகிய மொழிகளில் நல்ல புலமை பெற்றவர். "இலக்கியக் கட்டுரைகள்; கா. ர. கோ. வரலாறு; கம்பரச ஆராய்ச்சி, சரணாகதி" முதலிய நூல்களின் ஆசிரியர்—சிறப்பாகக் கம்பராமாயணத்தில் சிறந்த புலமை நலம் வாய்ந்தவர்.

இவர்தம் பிரிவு புலமை உலகத்திற்குப் பெரும் இழப்பு. இவர் தம் பிரிவால் துயருறும் உறவினர்கட்கும் நண்பர்களுக்கும் திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் தங்கள் துயரம் மிகுந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

தமிழறிஞர் 'அன்னகாமு' மறைவு

மதுரை, காந்தி கிராமத்திலுள்ள கிராமியக் கல்லூரியின் தமிழ்த் துறையில் பணியாற்றி வந்த அறிஞர் செ. அன்னகாமு 21-7-77 அன்று மறைவுற்றதறிந்து வருந்துகிறோம். அவர் தமிழாசிரியராக மட்டுமல்லாது எளிய காந்தியத் தொண்டராகவும் இருந்தார். பூமிதானப் பணியில் ஈடுபட்டவர். கிராமத்து மக்களுடன் கிராமத்து மகனாகப் பழகி, ஒவ்வொரு சிற்றூரிலும் தங்கிப் பணியாற்றியவர். ஏழை மக்களுக்கு இடையூறு ஏற்பட்டால் விரைந்தோடி அதனை ஆய்ந்து களைந்தவர்.

இவை அனைத்துக்கும் மேலாக அவர் தமிழுக்குச் செய்த பெருந்தொண்டு மக்களுடைய வாய்மொழியாக நாட்டுப்புறப் பாடல்கள் மலர்ந்து காற்றிலே மிதந்து வந்தபோது அவற்றை எழுத்தில் எழுதிப் பாதுகாத்ததாகும். மதுரை மாவட்டத்தில் பாடப்பெறும் நாட்டுப் பாடல்களைத் தொகுத்து 'ஏட்டில் எழுதாக் கவிதைகள்' என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டவர். இது 'கழக வெளியீடாக' வெளிவந்துள்ளது.

இவர்தம் மறைவு 'நாட்டுப்புறப் பாடல்' இலக்கியத்திற்குப் பேரிழப் பாகும். மறைந்த ஆசிரியர் அன்னாரது அவர்களின் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

திருவண்ணாமலை தேவராஜ முதலியார் மறைவு

திருவண்ணாமலை நகராட்சித் துணைத் தலைவரும் சட்டமன்ற உறுப் பினரும், வடார்க்காடு மாவட்ட எழுத்தாளர் சங்கத் தலைவரும், பேருந் துகள் அமைத்து நடத்திய பெருந் தொழிலதிபருமான திரு. டி. வி. தேவ ராஜ முதலியார் அவர்கள் 6—8—77 இல் தமது 74 ஆம் அகவையில் இறையடி சேர்ந்தார் என்னும் செய்தியறிந்து வருந்துகிறோம். மறைந்த திரு. முதலியார் அவர்களின் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கோவை திரு. கருத்திருமன் மறைவு

தமிழக முன்னாள் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், அரசியல் இலக்கியம் ஆகிய இரு துறைகளிலும் மிக ஈடுபாடு கொண்டவரும், சிறப்பாகக் கம்பராமாயணத்தில் அதிக ஈடுபாடு கொண்டவரும், முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவரும், சை. சி. நூற்பதிப்புக் கழகத்துடனும், கழக ஆட்சியாளருடனும் நெருங்கிய தொடர்பு கொண்ட வருமான திரு. பி. ஜி. கருத்திருமன் அவர்கள் 5—8—77 இல் கோவை யில் தமது 58 ஆவது அகவையில் காலமானார் என்ற செய்தியறிந்து வருந்துகிறோம். மறைந்த அன்னாரின் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மதிப்புரை

செந்தமிழ், சனகால், செங்கோர்

—டாக்டர் க. ப. அறவாணன்

பாரிநிலையம், சென்னை-1. ரூ. 6-00.

'மாந்தனின் பிறப்பிடம் குமரிநாடே' என்பதற்குப் புதிய சான் றுகள்; 'கடல் கொண்ட குமரியுடன் இணைந்திருந்த நிலப்பரப்புக்கள் இன்று பிரிந்து ஆப்பிரிக்காவாகவும் ஆத்திரேலியாவாகவும் விலகி நிற் கின்றன' என்ற கூற்றிற்கு அடிப்படையான புதிய கண்டுபிடிப்புகள்— இவ்வாராய்ச்சியில் ஈடுபட்டுள்ளோருக்கு இந்நூல் புதிய செய்திகள் பல வற்றைத் தாங்கி வந்துள்ளது.

ஆப்பிரிக்க மண்ணும்—தமிழ மண்ணும் அன்றொரு நாள் இணைந் திருந்தன என்ற உண்மையை ஆப்பிரிக்க மக்களிடையே இன்றும் நிலவி வரும் பழைய பழக்க வழக்கங்களைச் சான்றாகக் கொண்டு, அவற்றைத் தமிழ்ப் பழக்க வழக்கங்களோடு இணைத்துக் காட்டித் தாம் எடுத்துக் கொண்ட பணியைச் செம்மையாக முடித்துள்ளார் ஆசிரியர். ஆப்பிரிக்க மக்களின் வாழ்க்கை முறையை நேரில் சென்று உடனுறைந்து கண்டு இந்நூலை ஆசிரியர் படைத்துள்ளார். அந் நாட்டு மக்களின் நாக வழி பாடு, பல்லாங்குழி ஆட்டம், கும்மியாட்டம், கோலாட்டம், குடவோலை

முறை ஆகியவை படிக்கச் சுவையானவை. அடுத்து அந் நாட்டு மொழிகளில் ஒன்றான 'ஓலாப்' மொழிக்கும் திராவிட மொழிகளுக்கும் இலக்கண அடிப்படையில் அமைந்துள்ள ஒற்றுமைகளைக் காணும்போது வியப்பாக உள்ளது. நூலாசிரியர் அரிதின் முயன்று இம் மொழிகளின் இடையேயுள்ள இணைப்பைக் காட்டியுள்ளார். இதுவரை யாரும் இறங்காத துறையில் இறங்கித் திராவிட—ஆப்பிரிக்க இன ஒற்றுமைகளை ஆராய முற்பட்டிருக்கும் ஆசிரியர் பாராட்டுக்குரியவர். இது நூலின் முதல் பகுதியாகும்.

இரண்டாம் பகுதி ஆசிரியர் பணியாற்றச் சென்றிருக்கும் 'செனகால்' நாட்டைப் பற்றித் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. ஆப்பிரிக்க நாடுகள் பலவற்றில் ஒன்றான 'செனகால்' நாட்டு மக்களின் வாழ்க்கை நிலை, அந் நாட்டின் தட்ப, வெப்ப நிலைகள், அதன் விளை பொருள்கள் போன்ற புவியியல் குறிப்புகள் இப் பகுதியில் திரட்டிக் கொடுக்கப் பெற்றுள்ளன. அந் நாட்டிற்குப் பயணம் செய்ய விரும்புவோர்க்குப் பெரிதும் பயன்படும்.

மூன்றும் பகுதி 'செனகால்' நாட்டின் குடியரசுத் தலைவரான லியோபோல்டு செதார் செங்கோரைத் தமிழ் மக்களுக்கு அறிமுகப் படுத்தும் பகுதியாகும். செங்கோர் ஆப்பிரிக்கராயினும் பிரெஞ்சு மொழியில் பேரறிஞர் பாரிசு நாட்டுப் பல்கலைக் கழகங்களில் பிரெஞ்சுப் பேராசிரியராகப் புகழ் மணக்கப் பணிபுரிந்தவர். அத்துடன் அம் மொழியிலும் தம் மொழியான 'ஓலாப்'பிலும் சிறந்த கவிதைகளை இயற்றியவர். பல அரிய ஆய்வு நூல்களைப் பிரெஞ்சு ஆங்கில மொழிகளில் இயற்றியவர். 1960 இல் 'செனகால்' தனிக் குடியரசான நாள் முதல் அதன் குடியரசுத் தலைவராகத் திகழ்கிறார். இவையனைத்துக்கும் மேலாக ஆப்பிரிக்கப் பண்பாடு திராவிடப் பண்பாட்டுடன் இணைந்ததே என்ற நோக்கமுடையவர் இவர். இதன் தொடர்பாகச் சென்னைக்குச் சில ஆண்டுகட்கு முன்பு வந்திருந்தபோது சிறந்த ஆய்வுச் சொற்பொழிவை நிகழ்த்தினார். அடுத்து 'ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டை'த் தம் செனகால் நாட்டில் நடத்த வேண்டுமென்று அழைப்பு விடுத்துள்ளார். இந்த ஆண்டு இறுதியில் அம் மாநாடு நடக்கவிருக்கும் சூழ்நிலையில் அந் நாட்டைப் பற்றியும் அதன் தலைவரைப் பற்றியும் அறிந்து தமிழ்மக்கள் பயன்பெறும் வகையில் இந்நூலைப் படைத்த ஆசிரியர் பாராட்டுக் குரியவர்.

வாகைப் பூக்கள்

[ஆசிரியர் : தங்கவயல் பெ. எழிலன். வெளியீடு : மாங்குயில் பதிப்பகம், பெங்களூர் 560051. விலை : ரூ. 1-50]

தமிழ், இயற்கை, காதல், வாகைப் பூக்கள், பல்சுவை என்னுந் தலைப்புகளில் கவிதை நயம், கற்பனை வளம் பொதுள இயற்றப்பட்டுள்ள கவிதைகளின் தொகுப்பே இந்நூல். கவிதைகள் இனிய எளிய முறையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 2/140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ. சுப்பையா.